அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் முழுமையான சுகாதார பாதுகாப்புத்தன்மை கொண்டது.

பிரத்தியேகமான விசேட கிருமி எதிர்ப்புத் தன்மை கொண்ட இரசாயன கலவை மற்றும் இயற்கை மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட நறுமணம் மிக்க சிறப்பு நிறப்பூச்சைக் (பெயின்ட்) கொண்டு நமது பத்திரிகை அச்சிடப்படுகின்றது என்பதை வாசகர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்





மலர் : 01, இதழ் : 21 சார்வரி வருடம், ஆடி மாதம் 06ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (21.07.2020) ஹிஜ்ரி - 1441 துல்கஹ்தா பிறை-29, 0115886187 பக்கங்கள் 12 விலை ரூ.20

- ரிஷாட் கைது செய்யப்படும் விவகாரத்தில் -

# பொலிஸ் திணைக்களம் தேர்தல் ஆணைக்குழு மோதல்!

★ மூன்று தடவைகள் ஆஜராகாத காரணத்தினால் பதியுதீனுக்கு சிக்கல் ★ எப்படியாவது கைதுசெய்யத் தயாராகும் பாதுகாப்புத்தரப்பு


Office of the Election Commission
Sarana Mawatha, Rajagiriya
Rajagiriya 10107,
SRI LANKA

Election Commission

General Office : 011-2868441, 2868442, 2868443 Fax : 011-2868426
www.slelections.gov.lk e-mail : info@slelections.gov.lk

Date : 17 July, 2020

Mr. C.D. Wickramaratne
The Inspector General of Police (Acting)
Colombo.

Sir,

I refer to the Election Commission's letter of 15 July 2020 and my subsequent letter this morning regarding Hon. Rishard Bathiudin.

Further to these, the Commission has a letter from him sent this morning and copied to you where he refers to the Courts recognizing the need not to disturb candidates during campaign time and postponing cases for another MP.

As I intimated to you in this morning's letter, I put Hon. Bathiudin's matter and a similar matter concerning Hon. Ravi Karunanayake at the Party Leaders' meeting where many senior politicians were present. I also adverted to many politicians of various hues facing charges being extended the courtesy of the Police postponing inquiring when they were in the midst of an election campaign.

The persons participating at the meeting agreed unanimously, that Mr. Bathiudin and Mr. Karunanayake should not be disturbed while campaigning and inquiries should be put off until after the elections.

Please note and extend to Hon. Bathiudin and Hon. Karunanayake the courtesy we owe them as senior leaders of their parties whose participation in the ongoing campaign is essential to a free and fair election.

Thank you.

Faithfully,

Mahinda Deshapriya
Chairman
Election Commission

Copy to: All attendees of the political party leaders meeting held on 17.07.2020
Senior DIG – Elections
DIG – CID

● நமது அரசியல் செய்தியாளர்

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றை வழங்க முன்வருமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விடுத்த அறிவித்தலுக்கமைய முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் நேற்றைய தினம் சமுகமளிக்காத சூழ்நிலையில் அவரை கைதுசெய்யும் ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக உயர்மட்ட பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

தொடர்ச்சியாக மூன்று தடவைகள் சி.ஐ.டி.யினரின் அழைப்பை ஏற்று விசாரணைக்கு வராத காரணத்தினால் சட்டப்படி அவர் மீது நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

முன்னதாக கடந்த வெள்ளிக்கிழமை பதில் பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, தேர்தல் முடியும்வரை ரிஷாட்டின் தேர்தல் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாமெனவும் அதுவரை விசாரணைகளை ஒத்திவைக்குமாறு கேட்டதுடன் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதுபற்றி அறிவுறுத்தியதாகவும் கூறியிருந்தார்.

ஆனால், தேர்தல் ஆணைக்குழுவின் இந்த அறிவிப்பை புறந்தள்ளிய பொலிஸ் திணைக்களத்தின் குற்றப் புலனாய்வுப் பிரிவு ரிசாட்டை விசாரணைகளுக்கு ஆஜராகுமாறு நேற்று முன்தினம் எழுத்துமூலம் அறிவித்திருந்தது. 02

# தேர்தல் முடிந்த பின்னர் வாக்குமூலமளிப்பேன்!



## சட்டத்தரணிகள் ஊடாக அறிவித்தேன் - ரிஷாட்

நான் எந்தவித பயங்கரவாத செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை. விசாரணைகளுக்கு நான் பயப்படவுமில்லை. தேர்தல் காலமென்பதால் கட்சிப்பணிகளை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது.

எனவே, தேர்தல் முடிந்த பின்னர் நான் விசாரணைகளுக்கு சமுகமளித்து வாக்குமூலம் வழங்கத் தயாராக இருக்கிறேன்.

தேர்தல் ஆணைக்குழு உரிய அறிவுறுத்தல்களை வழங்கியும் பொலிஸ் கேட்கவில்லையென்றால் இதில் அரசியல் பழிவாங்கல் இருக்கிறதென்று தானே அர்த்தம்.

எனது நிலைமையை விளக்கி நான் சட்டத்தரணிகள் ஊடாக பொலிஸாருக்கு அறிவித்தேன் என்று நேற்றிரவு தமிழன் செய்திகளிடம் தெரிவித்தார் ரிஷாட்.

## கொழும்பில் நடுத்தர வர்க்க மக்களுக்கு விசேட வீட்டுத்திட்டம் சஜித் ஆட்சியில்

### மனோ கணேசன் தெரிவிப்பு



கொழும்பில் வாடகை வீடுகளில் வாழும் மத்திய வர்க்கத்தை சார்ந்த அரசு ஊழியர்கள், தனியார் ஊழியர்கள், சுயதொழில் செய்பவர்கள் ஆகிய நடுத்தரமட்ட வருமானம் பெறுகின்ற குடும்பங்களுக்கு, அவர்கள் இன்று... 02

## பரீட்சைகளை ஒக்டோபரில் நடத்தத்தீர்மானம் ஐந்தாம் தர புலமைப்பரிசில் 11இல்!

### கல்வியமைச்சு நேற்று அறிவிப்பு



● நா. தினுஷா

கொரோனா நோய்த்தொற்றின் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட 5ஆம் தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்வரும் ஒக்டோபர்... 02

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.

## நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் அடைமழை; ஐந்து மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை!

### பல இடங்கள் நீரில் மூழ்கின, சீரற்ற காலநிலை தொடரும்



நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தின் காரணமாக கொழும்பு, காலி, களுத்துறை, கேகாலை மற்றும் இரத்தினபுரி உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களுக்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மண்சரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும், இன்றைய தினம் மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும்... 02

## வவுனியாவிலும் கடும் காற்றுடன் மழை; மரங்கள் முறிந்து வீழ்ந்த விபத்தில் சிக்கி இரண்டு வயது குழந்தை மரணம்; மூவர் காயம்!



வவுனியா

வவுனியாவில் கடும் காற்றுடன் மழை பெய்ததுடன், மரங்கள் முறிந்து விழுந்து இரண்டு வயதுக் குழந்தை உயிரிழந்துள்ளதுடன், மூவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது; வவுனியாவில் பிற்பகல் வேளை கடும் காற்று வீசியதுடன், மழையும் பெய்தது. வவுனியா வடக்கு, நெடுங்கேணி, நைனாமடு, ஆயிலடி பகுதியில் வீதியால் சென்ற தாய் மற்றும் இரண்டு பிள்ளைகள் மீது வேப்பமரம் முறிந்து... 02

# ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியானது

## தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணோம்!

### கூட்டணியிலுள்ள சிறுபான்மை இனங்களின் தலைவர்களும் நிகழ்வில் இல்லை



படப்பிடிப்பு : கிரிஷான் காரியவசம்

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுத் தேர்தலுக்கான விஞ்ஞாபனம், நேற்று எத்துல்கோட்டேயில் உள்ள கட்சி அலுவலகத்தில் வெளியிடப்பட்டது.

விஞ்ஞாபனத்தின் முதற்பிரதிகளை முன்னாள் அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன, ரஞ்சித் மத்துமபண்டார ஆகியோரிடம் கையளித்தார் சஜித் பிரேமதாஸ.

தமிழர் தேசிய பிரச்சினைக்குத் தீர்வுத்திட்டம், முஸ்லிம் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கான தீர்வு என்று எதுவும் இந்த விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்படவில்லை.

அதேசமயம், இந்த நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சிகளான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகியவற்றின் தலைவர்களை காணமுடியவில்லை.

தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமையளித்து, மீண்டுமொரு பயங்கரவாதம் தோன்றாத வகையில் அரசியல் தலையீடுகள்... 02

## நீர்கொழும்பு குட்டித்தீவு பிரதேசத்தில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழப்பு!

● செல்வா - நீர்கொழும்பு

மின்னல் தாக்கியதில் நீர்கொழும்பு குட்டித்தீவு பகுதியை சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் காயமடைந்து நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இச்சம்பவத்தில் நீர்கொழும்பு பலகத்துறையைச் சேர்ந்த 50 வயதான முகம்மது சவ்பர் எனும்.... 02

## கொரோனா தொடர்பான உண்மை விபரத்தை நாட்டு மக்களுக்கு அரசு அறிவிக்க வேண்டும்!

### ஐக்கிய தேசியக் கட்சி செயலர் அகில வலியுறுத்து



கொரோனா நோய்த்தொற்றின் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதா என்பது தொடர்பிலும் இந்த நோய்த்தொற்றின் இரண்டாம் அலை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கிறதா என்பது தொடர்பிலும் அரசாங்கம் நாட்டு மக்களுக்கு உடனடியாக அறிவிக்க வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். 02



| லொத்தர் | வாரம் | திகதி | ஆங்கில எழுத்து | இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| அத கோட்டிபதி | 978ஆவது வாரம் | 2020 ஜூலை 12ஆம் திகதி | O | 05 30 56 77 |
| கோட்டிபதி கப்ருக | 596 ஆவது வாரம் | 2020 ஜூலை 10ஆம் திகதி | K | 66 67 70 73 |
| சுப்பர் போல் | 1173 ஆவது வாரம் | 2020 ஜூலை 11ஆம் திகதி | T | 14 15 16 49 |
| சனிதா வாசனா | 3336 ஆவது வாரம் | 2020 ஜூலை 11ஆம் திகதி | I | 27 33 35 64 |
| சுப்பர் போல் | 1174 ஆவது வாரம் | 2020 ஜூலை 12ஆம் திகதி | H | 07 16 44 68 |
| கோட்டிபதி கப்ருக | 597 ஆவது வாரம் | 2020 ஜூலை 12ஆம் திகதி | Y | 08 13 27 59 |
| சுப்பர் போல் | 1175 ஆவது வாரம் | 2020 ஜூலை 13ஆம் திகதி | W | 01 34 38 46 |
| அத கோட்டிபதி | 979 ஆவது வாரம் | 2020 ஜூலை 13ஆம் திகதி | X | 08 10 52 67 |
| சனிதா வாசனா | 3337 ஆவது வாரம் | 2020 ஜூலை 13ஆம் திகதி | Y | 06 59 67 68 |
| அத் கோட்டிபதி | 980 ஆவது வாரம் | 2020 ஜூலை 14ஆம் திகதி | O | 05 16 30 47 |
| கோட்டிபதி கப்ருக | 598 ஆவது வாரம் | 2020 ஜூலை 14ஆம் திகதி | D | 52 58 74 79 |
| அத கோட்டிபதி | 981 ஆவது வாரம் | 2020 ஜூலை 15ஆம் திகதி | W | 25 37 45 63 |
| சனிதா வாசனா | 3338 ஆவது வாரம் | 2020 ஜூலை 15ஆம் திகதி | A | 30 46 56 68 |
| சுப்பர் போல் | 1176 ஆவது வாரம் | 2020 ஜூலை 16ஆம் திகதி | U | 02 43 59 71 |

# ஜனாதிபதித் தேர்தல் வெற்றியை வைத்து பொதுத்தேர்தல் வெற்றியை எடைபோட முடியாது

## கண்டியில் ஹக்கீம் தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைந்ததை வைத்து நாடாளுமன்றத் தேர்தலிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கும் என்று எண்ணிவிடக்கூடாது. இப்போது அனைவரும் ஐக்கிய தேசிய கட்சி உடைந்து போய்விட்டது என நினைக்கின்றார்கள். அவ்வாறல்ல. ரணில் விக்கிரமசிங்கவோடு சிறு குழுவொன்றே நிற்கின்றது. ஏனைய 95சதவீதமானநாடாளுமன்ற உறுப்பினர்களும் 5 கட்சிகளின் தலைவர்களும் எங்களுடனேயே இந்த ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் ஒன்றிணைந்திருக்கின்றார்கள். இதுதான் மாற்று அரசாங்கமாக அமையும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நம்பிக்கை தெரிவித்தார்.

கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் வேட்பாளர்களான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் மற்றும் முன்னாள் அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம் ஆகியோர் பங்குபற்றிய தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் தெஹியங்க கிராமத்தில் நடைபெற்றபோது அதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு உரையாற்றுகையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது;

எங்களது தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் இவ்வாறாக பெருந்திரளாக கலந்துகொள்ளும் மக்களை நாடெங்கிலும் காண்கின்றோம். நாங்கள்தான் மாற்று அரசாங்கம். இதை அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இருந்தாலும், இந்த யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளாத சிலரை எண்ணி கவலையாக இருக்கின்றது.

இம்மேடையில் அரசியலில் நடுநிலையான போக்கைக் கடைப்பிடிக்கும் முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்காரும் கலந்துகொண்டிருக்கின்றார். அவர் மகத்தான மாற்றமொன்றுக்கு பங்களிப்பு செய்யக் கூடிய அரசியல்வாதி. அவ்வாறான அரசியல்வாதியொருவர் தனது கட்சியிலிருந்து தூரப்படுவதற்கு வேறு காரணிகள் இல்லை. ஒருவரிடத்தில்தான் பிழை இருந்தது. அந்தத் தவறு யாரிடமிருந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். இங்கு அதைப் பொருட்படுத்தாது விடுவோம்.

2015ஆம் ஆண்டில் பெரியதோர் எதிர்பார்ப்போடு ஜனாதிபதித் தேர்தலில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தினோம். அந்த மாற்றத்தின் அச்சாணிகளாக முஸ்லிம்கள் உட்பட சிறுபான்மையினரே இருந்தனர். அத்தகைய மாற்றம் ஏற்படுவதற்கு முக்கிய காரணம், பாக்கீர் மார்க்காரது தொகுதியான அளுத்கமயில் இடம்பெற்ற கலவரம் போன்றவை மக்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கமேயாகும். அது சாமான்யமானதல்ல. முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷயுத்தத்தைவெற்றிகொண்டதாக கூறிக்கொண்டு சதாகாலமும் ஜனாதிபதியாகவே இருந்துவிடலாம் என்ற ஆணவம் மற்றும் அகங்காரத்தினால் தனது ஆட்சிக்காலம் நிறைவடைவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னரே தேர்தலை வைத்துவிடலாமெனக் களமிறங்கினார். அப்போதைய அவரது தோல்விக்கு முக்கியமான காரணம், இவ்வாறான வன்முறைச் சம்பவங்களை மக்கள் மத்தியில் அரங்கேற்றியதேயாகும். கடந்த ஆண்டு நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லிம் சமூகத்தை தீவிரவாதிகளாக சித்திரித்தார்கள். இத்தாக்குதலுக்கு முஸ்லிம் அமைச்சர் ஒருவரும், ஆளுநர்கள் இருவருமே காரணமெனவும், இவர்கள் 48 மணித்தியாலங்களுக்குள் தத்தமது பதவிகளை இராஜினாமா செய்யவேண்டுமெனவும் கோஷமிட்டு பெரும்பான்மை மக்களை சாரை சாரையாக உண்ணாவிரத கூடாரங்களில் ஒன்றுசேர்த்தனர். இரு தனியார் தொலைக்காட்சி ஊடகங்களைப் பயன்படுத்தி நேரடி ஒளிபரப்புகளினூடாக மக்கள் மத்தியில் பரவச் செய்தார்கள்.

இவ்விடயம் தொடர்பில் நாங்கள் தீர்வைப் பெறுவதற்கு அன்றைய பிரதமரை நாடிய போதிலும் அதனை சரியான விதத்தில் கையாள எத்தனிக்கவில்லை. எதுவுமே கைக்கூடாத நிலையில்தான் நாம் அனைவரும் கூட்டாக இராஜினாமா செய்வோம் என்ற முடிவை எட்டினோம். அன்றைய சூழ்நிலையில் அம்முடிவு மக்களுக்கு பாரியதொரு மனஆறுதலை அளித்தது. சமூகத்தின் பாதுகாப்பைக் கருதி எங்களது முஸ்லிம் தலைமைகள் அனைவரும் பதவிகளைத் துறந்து அரசாங்கத்திற்கு இவ்வாறான அழுத்தமொன்றை வழங்கியதனால் மக்கள் மத்தியில் முஸ்லிம் தலைமைகள் மீது கொண்ட நம்பிக்கை மேலும் அதிகரித்தது. அன்று அது சமூகத்திற்கு ஆறுதலை அளித்திருந்தாலும், இப்போது இன்று எதிர்த்தரப்பிற்கு வேறுவிதமான விளைவுகளை ஏற்படுத்தியிருப்பதை அவதானிக்கின்றோம்.

பெரும்பான்மை மக்களிடத்தில் இவ்விடயத்தை வேறு கோணத்தில் வைத்து வியாபாரம்செய்தார்கள். குற்றமுள்ளவர்களை இராஜினாமா செய்யச் சொன்னால், மாறாக குற்றமிழைக்காதவர்களும் சேர்ந்து தமது பதவிகளை ஏன் இராஜினாமா செய்யவேண்டும்? குற்றமிழைத்தோரை பாதுகாப்பதற்காக அனைவரும் ஒன்றாக சேர்ந்துவிட்டார்கள் என்ற பாங்கில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வழிப்பாட்டுத்தலங்கள் உள்ளடங்கலாக பிரசாரங்களை முன்னெடுத்தார்கள். இதன் விளைவாகவே பெரும்பாலான வாக்குகள் எதிரணிக்குக் கிடைத்தன. இது எங்களுக்கொரு படிப்பினையாகும். எதிர்காலத்தில் எங்களது அணுகுமுறைகள் எவ்வாறு அமையவேண்டுமென்பதை தீவிரமாக சிந்திக்கவேண்டும். நாங்கள் எதைச் செய்தாலும், அதில் குறையை காணுகின்ற கும்பல்தான் ஆட்சியில் இருக்கின்றது. மீண்டும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவினால் விசாரணைகளை முன்னெடுத்து அங்கு வழங்கப்படுகின்ற சாட்சியங்களை தொலைக்காட்சிகளில் பகிரங்கமாக காட்டுகின்றார்கள். இதன்மூலம் மக்கள் மத்தியில் பீதியை உருவாக்குகின்றார்கள். அதனால் அவர்கள் பெரும்பான்மை இனத்தவர்களின் வாக்குகளைக் கைப்பற்றும் திட்டமே அரங்கேறுகின்றது. இந்தக் கட்டத்தில்தான் சமூகம் மிகவும் அவதானமாக சிந்திக்கவேண்டும். அவர்களை பொறுத்தமட்டில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை புதிதாக உரிமைகளை வென்றெடுப்பதற்குப் பதிலாக இப்போது இருப்பதை மேலும் தக்கவைத்துக்கொள்வதற்காகவே தேர்தலை பகடைக்காயாக்கியுள்ளார்கள். அதற்காக திட்டமிட்டு புதிய நாடாளுமன்றத்தில் முஸ்லிம்களது பிரதிநிதித்துவத்தை எவ்வளவு தூரம் குறைக்க முடியுமோ அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கூலிப்படைகளை அமர்த்தி அவர்களிடம் கொந்தராத்துகளைக் கொடுத்திருக்கின்றார்கள். எமது மக்கள் இவ்விடயம் தொடர்பில் தெளிவான அறிவோடு இருக்கின்றார்கள். மக்களை எல்லா காலங்களிலும் மடையர்களாக்க முடியாது. அவர்களுக்கு இப்போது நிலைமை நன்றாக விளங்குகின்றது. தலைமைகளை பறிகொடுத்தால் திரும்பவும் அவர்களை மீளப் பெறுவதென்பது அவ்வளவு சாதாரண விடயமல்ல. இவ்வாறுதான் முன்னர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்காரையும் இழந்தோம். இதனால் அந்த களுத்துறை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை இன்றுவரை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

நாடாளுமன்றத்திற்குள்ளும், வெளியிலும், சர்வதேசத்திற்கு மத்தியிலும் ஏதாவதொரு விடயத்தை தைரியமாக சொல்லக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட தலைமைத்துவமொன்று இல்லாமல்போனால், அதனால் ஏற்படக்கூடிய பாதிப்பையும், பாரதூரத்தையும் நாங்கள் இப்போது நன்குணர்கின்றோம். இப்போது பெரும்பான்மை மக்களிடத்தில் பேசக்கூடிய அரசியல் ஆளுமைகள் எங்களிடத்தில் குறைவாகவே உள்ளன. அவர்களுக்கு மத்தியில் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் தெளிவை ஏற்படுத்துமளவுக்கு விளங்கக்கூடிய மொழியிலும், அதற்கான பாங்கிலும் பக்குவத்தோடும் பண்போடும் சொல்ல வேண்டும். அதனால்தான் சிறந்த தலைமைகள் நாடாளுமன்றத்தில் இருந்தாகவேண்டும். அதற்காகவே சஜித் பிரேமதாஸ இவ்வாறான ஆளுமைகளை தெரிவுசெய்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பும் பணியில் இறங்கியுள்ளார்.

எதிர்வரும் தேர்தலில் எங்களது பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்காக பல கோணங்களிலும் திட்டங்களை தீட்டி செயற்படுகின்றார்கள். முஸ்லிம்களை புண்படுத்துவதற்காக வேண்டுமென்றே கபட நாடகங்களை அரங்கேற்றுகின்றார்கள். அவற்றை நாம் முறியடிக்கவேண்டும்.

கொரோனா பிரச்சினையின்போது முஸ்லிம் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய அனுமதி கேட்டால், வேண்டுமென்றே எரிக்க வேண்டும் என்று கூறி அவற்றை தகனம் செய்தார்கள். உலக சுகாதார ஸ்தாபனத்தினால் 180இற்கும் மேற்பட்ட நாடுகளிலும் கொரோனா தொற்றினால் இறந்தவர்களின் சடலங்களை எரிக்கவோ, புதைக்கவோ முடியும் என அனுமதி வழங்கியிருந்தபோதிலும், அதனை ஏற்றுக்கொள்ள இன்றைய ஆட்சியாளர்கள் தயாராக இருக்கவில்லை.

ஏனென்றால், இனவாதிகள் அதிருப்தியடைவதை அரசாங்கம் விரும்பவில்லை. முஸ்லிம்களுக்காக என்று வரும்போது அதனை செய்யக்கூடாது என்றவாறாக அவ்வளவு மட்டகரமான அடக்குமுறையை இவர்கள் கட்டவிழ்த்திருக்கின்றார்கள் என்பதை கண்டோம். நோய்த் தொற்றாளர்களின் உடல்களை எரிக்கின்ற விடயம் முஸ்லிம்களின் மனங்களை மிகவும் புண்படுத்துவதால் இதனை மீள்பரிசீலனை செய்யுங்கள் எனக் கோரினோம். அதனை விட்டுக்கொடுத்திருந்தால் முஸ்லிம்கள் மத்தியில் இந்த ஆட்சி சம்பந்தமாக இருந்த அதிருப்தி குறையும் எனக் கூறினேன்.

முஸ்லிம்களது உடல்களை நல்லடக்கம் செய்வதற்குரிய அனுமதியை அளிப்பதனூடாக எங்களுக்கு விட்டுத்தந்திருந்தால் அவர்களது பெரும்பான்மை வாக்குவங்கியில் பாரிய சரிவை எதிர்கொள்ளவேண்டி வருமென அஞ்சினார்கள். பெரும்பான்மை இனவாதிகளை எதிர்த்துகொள்வதற்கு ஆட்சியாளர்கள் விரும்பவில்லை. ஆனால், இவற்றை மிக பக்குவத்தோடு கையாளவேண்டும். எங்கள் வாய்களை மூடுவதற்கென்றே பீதியில் நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டார்கள்.

எதிர்வரும் தேர்தலில் நாடாளுமன்றத்தில் எங்களது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை அதிகரித்துக்கொள்வதே தற்பொழுது நாங்கள் எதிர்நோக்கும் சவாலாகும். அந்த அறைகூவலுக்கு எங்களுக்கு ஒத்துழைப்பதற்கு நீங்கள் அனைவரும் தயாராக வேண்டும் - என்றார்.

## வவுனியாவிலும்...

விழுந்தமையால் காயமடைந்த தாயும், இரண்டு வயது மற்றும் 4 வயது இரு பிள்ளைகளும் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி இரண்டு வயதுக் குழந்தை உயிரிழந்துள்ளது. தாயும், நான்கு வயதுக் குழந்தையும் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

அத்துடன், வவுனியா - ஹொரவப்பொத்தானை வீதியில் இறம்பைக்குளம், இரண்டாம் கட்டை ஆகிய பகுதிகளில் வீதிக்குக் குறுக்காக மரங்கள் முறிந்து விழுந்தமையால் சுமார் ஒரு மணிநேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞரொருவர் இறம்பைக்குளம் பகுதியில் முறிந்து விழுந்த மரத்திற்குள் அகப்பட்டு காயமடைந்துள்ளார்.

மேலும், கடும் காற்று காரணமாக வவுனியா தெற்கு வலயக் கல்வி திணைக்களத்திற்குள் நின்ற வேப்பமரமொன்று அடியோடு முறிந்து விழுந்தமையால் கட்டடமொன்று பகுதியளவு சேதமடைந்துள்ளது.

இவைதவிர, வைரவபுளியங்குளம், உள்வட்ட வீதி உள்ளிட்ட பல பகுதிகளில் பல மரங்கள் கடும் காற்றினால் முறிந்து வீழ்ந்துள்ளன.

## கொரோனா...

அந்தக்கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

கொரோனா நோய்த்தொற்று நிலைமை நாட்டில் பரவலடைந்து வருகின்ற நிலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையையும் கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையையும் நடத்தவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. மாணவர்களுக்குரிய பரீட்சைகளை உரிய நேரத்தில் நடத்தி முடிப்பது அவசியமாகும். அதேபோன்று அவர்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டு பரீட்சைகள் நடத்தப்பட வேண்டியதும் கட்டாயமானதாகும்.

ஆகவே, கொரோனா நோய்த்தொற்று முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதா, அவ்வாறு இல்லாவிடின் எதிர்காலத்தில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியமா, நாட்டில் கொரோனா நோய்த்தொற்றின் இரண்டாம் அலை ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளதா என்பவை தொடர்பான விபரங்களை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு விரைவாக அறிவிக்க வேண்டும்.

மேலும், தொல்பொருள் என்பது தேசிய மரபுரிமைகளுடன் தொடர்புடையதாகும். அவற்றை புறக்கணிக்கும் வகையிலேயே அரசாங்கம் செயற்பட்டு வருகிறது. தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் கீழ் தொல்பொருட்களுக்கு எதிரான குற்றச்செயல்களில் ஈடுப்படுபவர்களுக்கு இரண்டு அல்லது மூன்று வருடகால சிறைத்தண்டனை வழங்கப்படும். ஆனால், அந்த ஏற்பாடுகளுக்கு அப்பால் புதிய ஆணைக்குழுக்களை நியமித்து நாட்டிலுள்ள பழைமை வாய்ந்த தொல்பொருட்களை கைப்பற்றிக்கொள்ளவே அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

அதேபோன்று, அமெரிக்கவுடனான மிலேனியம் ஒத்துழைப்பு ஒப்பந்த யோசனைகளை கடந்த அரசாங்கத்தில் நாங்கள் முன்வைத்தபோது அதற்கு எதிராக கருத்து வெளியிட்ட தற்போதைய அரசாங்கம், அதே ஒப்பந்தத்தை ஆய்வு செய்வதற்கென்று தனியான குழு நியமித்து மீளாய்வு செய்கிறது. எனவே, நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் மீண்டும் அவர்களுக்கு ஆட்சிபலம் செல்லுமாக இருந்தால் நிச்சயமாக அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார் .

## நீர்கொழும்பு...

இரண்டு பிள்ளைகளின் தந்தையே மரணமானார்.

இவர் வழமைபோல் நேற்று காலையில் மீன்பிடித் தொழிலுக்காக குட்டிதீவு பிரதேசத்திற்கு சென்றுள்ளார். வள்ளத்தில் தனிமையில் சென்று மீன்களைப் பிடித்துவந்து இரு கூடை மீன்களை விற்றுள்ளதுடன் அடுத்த கூடை மீன்களை கடற்கரையில் வைத்து தெரிந்துகொண்டிருக்கும் போது காலை 9 மணியளவில் திடீரென இடிமின்னல் ஏற்பட்டபோது மின்னல் தாக்கியுள்ளதாக தெரியவருகின்றது.

அப்போது அங்கிருந்த மேலும் இருவரையும் மின்னல் தாக்கியுள்ளன. மின்னல் தாக்கியதில் சிக்கி காயமடைந்த இருவரும் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## நாட்டின்...

வடமேல் மாகாணங்களில் இடியுடன் கூடிய மழைபெய்யக்கூடும் என்றும் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் காலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, மேல், சப்ரகமுவ,மத்திய, தென் மற்றும் ஊவா மாகாணங்களின் சில பிரதேசங்களில் இன்றைய தினம் 75 மில்லி மீற்றருக்கு அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகுமென்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் பாதுக்க மற்றும் சீதாவாக்கை பிரதேச செயலகங்களை அண்மித்த பிரதேசங்கள், காலி மாவட்டத்தில் யக்கலமுல்ல,நெலுவ, நாகொட, எல்பிடிய, நியாகம, இமடுவ மற்றும் பத்தேகம ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளை அண்மித்த பிரதேசங்களுக்கு மண்சரிவு அபாயம் காணப்படுகிறது.

களுத்துறை மாவட்டத்தில் ஹொரண, தொடாங்கொட, களுத்துறை, பேருவலை, பாணந்துரை, மதுராவல, மிலானியா, இங்கிரியா, புலத்சிங்ஹல, மதுகம, பலிந்தநுவர, வெலல்லவிட மற்றும் அகலவத்தை ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளை அண்மித்த இடங்களில் மண்சரிவு அபாயம் காணப்படுகின்றது.

இதேவேளை, கேகாலை மாவட்டத்தில் புலத்கோஹூபிடிய, தெரணியகலை, ருவான்வெல்ல, யட்டியாந்தோட்டை மற்றும் தெஹியோவிட்டை பிரதேச செயலகப்பிரிவுகளை அண்மித்த பிரதேசங்கள் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி, எஹலியகொடை மற்றும் குருவிட பிரதேச செயலகப்பிரிவுகளுக்குட்பட்ட பிரதேசங்களுக்கு இவ்வாறு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த பிரதேசங்களில் கடந்த சில மணித்தியாலங்களில் 75 - 100 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இந்நிலை தொடருமாயின் மணிசரிவு அபாயம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அதேபோன்று சாய்வு இடிந்து-விழுகை, பாறை விழுகை, நிலவெட்டுச்சாய்வு இடிந்து விழுகை மற்றும் தரை உள்ளிறக்கம் போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் ஆபாயம் உள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

மேலும், மண்சரிவு எச்சரிக்கையுள்ள பிரதேசங்களை சார்ந்த மக்கள் அவ்வாறான இடங்களிலிருந்து வெளியேற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மண்சரிவு எச்சரிக்கையுள்ள தொடர்பில் மிக அவதானத்துடன் இருப்பதுடன் மழைவீழ்ச்சி தொடருமாயின் விரைவாக பாதுகாப்பான இடங்களுக்கு நகரவேண்டுமென்றும் கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், நேற்றைய தினம் தெஹியோவிட்ட பிரதேசத்தில் அதிகளவான மழைவீழ்ச்சி பதிவாகியிருந்தது. அதற்கமைய, கேகாலை-தெஹியோவிட்ட, காலி-ஹியாரே, காலி-எத்கதுர, களுத்துறை-மீகஹாதென்ன, இரத்தினபுரி- பரகடுவ, கம்பஹா-பஸ்யால ஆகிய பிரதேசங்களில் முறையே 219,160,137,117,106,100 மில்லிமீற்றர் அளிவிலான மழைவீழ்ச்சி பதிவாகியிருந்தது.

மேலும் கம்பஹா - மீனுவங்கொடை, காலி - ஏகொட, மெனிக்கந்த, யக்கலமுல்ல ஆகிய பிரதேங்களில் முறையே 109,82,78.5,74.5 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. தொடர்மழை காரணமாக நேற்று நாட்டின் பல இடங்கள் நீரில் மூழ்கின. ஆறுகள் நிரம்பும் அபாயம் இருப்பதால் நீரேந்து பகுதிகளில் உள்ள மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## ஐக்கிய...

இல்லாமல் நாட்டின் சட்டத்தை அமுலாக்கும் செயற்பாடுகளை முப்படையினர் மற்றும் பொலிஸாரிடம் வழங்குதல், பாதுகாப்புப் படையினருக்கு அதிகபட்ச ஊதியம், பயங்கரவாதம், அடிப்படைவாதம் மீதும் எழாமல் இருக்க உயர்ந்தபட்ச நடவடிக்கை, கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களின் மின்கட்டணங்களை முற்றாக இரத்துச் செய்தல், கொரோனா விசேட நிவாரண நிதியம் உருவாக்கல், வெளிநாட்டில் இருந்து வர முடியாதவர்களை இலங்கைக்கு திருப்பியழைத்தல், தோட்டத் தொழிலாளருக்கு நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு, தொழிற்திறமை மற்றும் உற்பத்தித் திறன் அடிப்படையில் 1500 ரூபாவரை அதனை அதிகரித்தல், கொரோனாவால் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு மாதம் இருபதாயிரம் ரூபா, எரிபொருள் விலைகளை குறைத்தல் போன்றவையும் அந்த விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## ரிஷாட்...

ஆனால், நேற்று தனது சட்டத்தரணிகள் ஊடாக கடிதமொன்றை சி.ஐ.டியினருக்கு அனுப்பிய ரிஷாட், தேர்தல் முடிந்த பின்னர் விசாரணைக்கு வந்து வாக்குமூலமளிக்க தினமொன்றை தருமாறு கோரியிருந்தார். ஆனாலும் அவரின் இந்த கோரிக்கை பொலிஸ் திணைக்களத்தால் பரிசீலிக்கப்படவில்லையென அறியமுடிந்தது. இதன்படி தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கையை புறந்தள்ளி - மூன்று தடவைகள் ஆஜராகாத காரணத்தை முன்வைத்து ரிஷாட்டை கைது செய்ய பாதுகாப்புத் தரப்பு தயாராகி வருவதாக அறியமுடிந்தது. சிலவேளை ரிஷாட் கைது செய்யப்பட்டால் தேர்தல் ஆணைக்குழு அது தொடர்பில் கடுமையான நிலைப்பாட்டை எடுக்குமென தெரிகிறது.

## கொழும்பில்...

வாடகையாக செலுத்தும் தொகையையே சொந்த வீட்டுக்கான மாதக் கட்டணமாக மாற்றி அவர்களுக்கு சொந்த மனைகளை வழங்கும் வீட்டுத்திட்டத்தை சஜித் ஆட்சியில் முன்னெடுப்போம் என முன்னாள் தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சரும், கொழும்பு மாவட்ட எம்பியுமான மனோ கணேசன் கூறியுள்ளார். மட்டக்குளி, வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை ஆகிய பகுதிகளில் நடைபெற்ற பிரசார கூட்டங்களில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

எமது நல்லாட்சியின் போது, வடகொழும்பில் 13,500 தொடர்மாடி மனைகளை கட்டி பின்தங்கிய குடிசைகளில் இங்கு வாழும் மக்களை புதிதாக குடியமர்த்தினோம். இன்னமும் இத்தகைய 10,000 தொடர்மாடி மனைகளுக்கு அடித்தளம் இட்டுள்ளோம். கடந்த நான்கு வருடங்களில் வட கொழும்பில் குடிசைகள் வெகுவாக மறைந்து விட்டன. நண்பர் அமைச்சர் சம்பிக ரணவக்க இந்த அபிவிருத்திக்கு பொறுப்பாக இருந்தார். இந்த வீட்டுத்திட்டங்களில் பாரபட்சமின்றி குடிசைகளில் வாழ்ந்த தமிழ், முஸ்லிம் மக்களே பெரும்பான்மையாக குடியேற்றப்பட்டார்கள். பாரபட்சங்கள் நிகழாவண்ணம் நாம் கண்காணித்து கொண்டோம். இதற்கு முந்தைய ராஜபக்ஷ அரசாங்க காலத்தில் இந்த தமிழ், முஸ்லிம் மக்களை கொழும்பில் இருந்து வெளியேற்ற முயற்சிகள் நடந்ததையும், அப்போது அவற்றுக்கு எதிராக நாம் போராடி அவற்றை தடுத்து நிறுத்தியதையும் மக்கள் மறக்க மாட்டார்கள். அதேபோல் மத்திய தர வர்க்க மக்களுக்கான விசேட வீட்டு மனைத்திட்டத்தை முன்னெடுக்கும்படி கோரிக்கைகளை பலமுறை நான் அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் விடுத்தேன். என்னுடன் இணைந்து இதற்காக நண்பர் முஜிபுர் ரஹ்மானும் கோரிக்கை விடுத்தார். எனினும் பிரதமர் ரணில் இதை கடைசிவரை தட்டிக்கழித்தே விட்டார். இந்த நடுத்தர வர்க்க மக்களுக்கான வீட்டுத்திட்டம் நடைமுறையாகும் பட்சத்தில், அது அன்றைய தேசிய வீடமைப்பு அமைச்சராக இருந்த சஜித் பிரேமதாஸவின் கீழ் வந்திருக்கும். இதுதான் இந்த திட்ட ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்படாததன் காரணமாமா என எனக்கு புரியவில்லை. எனினும் எமது ஆட்சியின் கீழ் இந்த திட்டம் நடைமுறையாகும். இது கொழும்பில் பெரும்பான்மையாக வாடகை வீடுகளில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும் என்றார் மனோ.

## பரீட்சைகளை...

மாதம் 11ஆம் திகதியும் கல்விப் பொது தராதர உயர்தர பரீட்சையை ஒக்டோபர் 12ஆம் திகதி முதல் நடத்துவதற்கும் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் விளக்கமளிக்கும் வகையிலான ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கல்வி அமைச்சில் இடம்பெற்றது. இதன் போது கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் ரஞ்சித் சந்திரசேகர கூறுகையில், ஒக்டோபர் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதிவரை இடம்பெறும். மேலும், பாடசாலை மாணவர்களுக்கான இரண்டாம் தவணை விடுமுறை ஒக்டோபர் மாதத்துக்கு காலமாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, ஒக்டோபர் 9ஆம் திகதி முதல் நவம்பர் 16ஆம் திகதிவரை இரண்டாம் தவணைக்கான விடுமுறையை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

11, 12 மற்றும் 13ஆம் தர மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் திங்கட்கிழமை 27ஆம் திகதி ஆரம்பமாகும். இதர தரங்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



## முதலமைச்சராவது எப்போது? ஜோதிடம் பார்க்கும் சின்னம்மா



பெங்களூர் சிறையிலுள்ள சசிகலா விரைவில் விடுதலையாவார் என தெரிவிக்கப்படுகிறது. "வெளியே வந்தால், தமிழக அரசியலில் நிச்சயம் மாற்றம் வரும்" என சசிகலா ஆதரவாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

சசிகலாவின் அரசியல் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதில் ஆர்வம் காட்டும் அவரது ஆதரவாளர்கள், தமிழகத்தில் பிரபல ஜோதிடரிடம் ஆலோசனை நடத்தியுள்ளனர். இத்தோடு நிற்காமல், வடமாநில ஜோதிடர்களையும் அணுகியுள்ளனர். சமீபத்தில், சசிகலா ஆதரவாளர் ஒருவர், கங்கைக் கரையிலுள்ள காசிக்கும், அலகாபாத்துக்கும் சென்றுவந்துள்ளார்.

காசியில் பிரபல ஜோதிடர் ஒருவரைப் பார்த்து, சசிகலாவின் ஜாதகத்தைக் காட்டி, எதிர்காலம் குறித்து கேட்டிருக்கிறார். அந்த ஜோதிடரின் ஆலோசனைப்படி, காசி விஸ்வநாதர் கோவிலில் சிறப்புப் பூஜையும் நடத்தப்பட்டுள்ளதாம். இதேபோல, அலகாபாத்திலும், திரிவேணி சங்கமத்திலும் பூஜைகள் நடத்தப்பட்டுள்ளதாம். "சசிகலா எப்போது முதல்வர் ஆவார். அதற்கு என்ன பரிகாரம் செய்யவேண்டும்" என்றெல்லாம், ஜோதிடர்களிடம் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளதாம்.

சசிகலாவின் சிறைத் தண்டனை முடிந்த நாளிலிருந்து, ஆறு ஆண்டுகளுக்கு அவர் தேர்தலில் போட்டியிட முடியாது என்பது சட்டம். இது, அந்த ஆதரவாளர்களுக்கு தெரியாததுதான் விந்தை!

## உலக நாடுகளை மீண்டும் அச்சுறுத்தும் கொரோனா: அமெரிக்காவில் ஒரேநாளில் 62,000 பேருக்கு தொற்று!



அமெரிக்காவில் நாளொன்றுக்கு சராசரியாக 62 ஆயிரம் பேர் கொரோனா தொற்றுக்கு இலக்காகிவருவது ஜனாதிபதி ட்ரம்ப் அரசை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

அமெரிக்காவிலுள்ள 30இற்கும் மேற்பட்ட மாநிலங் களில் வைரஸ் தொற்று அதிகரித்துவருகிறது. இதுவரை 38 இலட்சத்து 97 ஆயிரம் பேரை கொவிட் – 19 வைரஸ் பாதித்திருக்கிறது. டெக்ஸ்சாஸ், போரிடா, கலிபோர்னியா ஆகிய மாநிலங்களில் மின்னல் வேகத்தில் கொரோனா பரவி வருகிறது. இதுவரை ஒரு இலட்சத்து 43 ஆயிரத்து 300 பேரின் உயிர்களை கொரோனா வைரஸ் பறித்துச்சென்றிருக்கிறது.

உலகளவில் (நேற்றைய நிலைவரப்படி) 1,40,43,176 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 5,97,583 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், தென்னமெரிக்க நாடான சிலியில் வைரஸின் தாக்கம் சற்றுக் குறைய தொடங்கியதையடுத்து சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன

பிரேஸிலில் வைரஸ் பரவலும், உயிரிழப்புகளும் அதிகரித்துள்ளன. அங்கு 25 ஆயிரம் புதிய தொற்றும், 720 புதிய உயிரிழப்புகளும் பதிவாகியிருக்கின்றன.

மெக்சிகோ, பெரு, தென்னாரிக்கா, ஆர்ஜென்டினா, சவூதி அரேபியா ஆகிய நாடுகளிலும் கொரோனா தீவிரமாக பரவிவருகிறது.

இந்தியாவில் இதுவரை இல்லாதள வில் நேற்று முன் தினம் (24 மணி நேரத்துள்) 40,425 பேருக்கு கொரோனா உறுதிசெய்யப்பட்டுள் ளது. 681 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தியாவில் முதன்முறையாக கொரோனா தொற்று, 40 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. இதன்மூலம் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 11,18,043 ஆகவும், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 27,497 ஆகவும் அதிகரித்துள்ளது.

மஹாராஷ்டிராவில் மட்டும் 3,10,455 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1.70 இலட்சத்தைத் தாண்டியுள்ளது. சென்னையில் மட்டும் 1,200 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். சென்னையில் பாதிப்பு குறைந்துவரும் நிலையில் மற்ற மாவட்டங்களில் பாதிப்பு அதிகரித்துவருகிறது.

**சீனாவில் மீண்டும் கொரோனா:**

சீனாவில் மீண்டும் அதிகரித்துவரும் கொரோனா பாதிப்பால் வடமேற்கு மாகாணமான ஷின்ஜியாங்கில் போர்க்கால அடிப்படையில் அவசர நிலை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## திருப்பதி கோயில் அர்ச்சகர் கொரோனாவால் பலி: 170 தேவஸ்தான ஊழியர்களுக்கு வைரஸ் தொற்று



திருப்பதி கோவிலின் அர்ச்சகரொருவர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளார்.

ஆந்திர மாநிலத்திலுள்ள திருமலை திருப்பதி கோவில் கடந்த ஜுன் மாதம் ஒருசில கட்டுப்பாடுகளுடன் பக்தர்களின் தரிசனத்திற்காக திறக்கப்பட்டது. திருமலையில் பக்தர்களை தரிசனத்திற்கு அனுமதித்த பின் கொரோனா தொற்று பரவத் தொடங்கியது. திருப்பதியிலும் நோய்த் தொற்று அதிகரித்தது. தேவஸ்தான ஊழியர்கள், அர்ச்சகர்கள் என இதுவரை 170 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அர்ச்சகரொருவர் கொரோனாவால் உயிரிழந்துள்ளார். முன்னாள் பிரதான அர்ச்சகரான சீனிவாசமூர்த்தி (வயது 75) கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

## சிரியாவில் கார்க் குண்டுத் தாக்குதல்: 5 பேர் பலி; 85 பேர் படுகாயம்!






சிரியாவில் மேற்கொள்ளப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்துள்ளதுடன், 85இற்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

சிரியாவின் கிலிஸ் மாகாணத்தின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள சைகு கிராமத்தில் இந்தத் தாக்குதல் சம்பவம் நிகழ்ந்துள்ளது. காயமடைந்தோரில் பலரது நிலைமை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. குண்டுத் தாக்குதலுக்கு (பத்திரிகை அச்சுக்கு செல்லும்வரை) எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

## சவூதி மன்னர் சல்மான் வைத்தியசாலையில் அனுமதி



சவூதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸிஸ் (வயது 84) உடல்நலக்குறைவு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரியாத் பிராந்தியத்தின் ஆளுநராக 50 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றிய சல்மான், மன்னராக முடிசூடுவதற்கு முன்பு இரண்டரை ஆண்டுகள் பட்டத்து இளவரசராகவும், 2012 ஆம் ஆண்டு முதல் துணை பிரதமராகவும் பணியாற்றியவர்.

இந்நிலையில், பித்தப்பையில் ஏற்பட்டுள்ள வீக்கம் காரணமாக மன்னர் சல்மான் தலைநகர் ரியாத்திலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

## திருக்கேதீஸ்வர ஆலயத்தில் பிதிர்க் கடன் நிறைவேற்றல்





**(மன்னார் நகர்)**

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நேற்று ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு பிதிர்க்கடன் நிறைவேற்றும் நிகழ்வு இடம்பெற்றது.

இறந்த பிதிர்களின் ஆன்ம ஈடேற்றம் வேண்டி நெய் விளக்குகளையும் பெருமானுக்கு மோட்ச விளக்குகளையும் ஏற்றி பக்தர்கள் தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றினர்.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி மக்கள் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

அத்தோடு, ஆன்ம ஈடேற்றம் வேண்டி திருக்கேதீஸ்வர பாலாவி தீர்த்தத்தில் நீராடியும் பிதிர்க்கடன்களை மக்கள் நிறைவேற்றினர்.




### எல்லைத் தாண்டி மீன்பிடி:

## கைதான மீனவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை

**(யாழ்)**

தனிப் படகில் கடற்றொழிக்குச் சென்ற மீனவர், எல்லை தாண்டிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நிலையில், நீதிமன்றின் அனுமதியுடன் கொரோனா தொற்றைக் கண்டறியும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்த யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட அவர்கள் அச்சுவேலி பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

அச்சுவேலி வளலாயைச் சேர்ந்த செல்வரத்தினம் செல்வதாஸ் (வயது -35) என்பவரே இவ்வாறு வழித் தடமாறி சர்வதேச கடல் எல்லைக்குள் சென்றுள்ளார்.

மல்லாகம் நீதிமன்றத்தில் அவர் நேற்று முற்படுத்தப் பட்டார். அவரை யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் சேர்த்து பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்த நீதிமன்றம் அனுமதியளித்தது. அவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## அனைத்தையும் தவறவிட்டுவிட்டு 20 ஆசனங்களை கேட்கின்றனர்

### சிவசக்தி ஆனந்தன் குற்றச்சாட்டு

**(வவுனியா)**

சர்வதேசத்துடன் பேசுவதற்கு கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் தவறவிட்டுள்ள கூட்டமைப்பு மீண்டும் 20 ஆசனங்களை கேட்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளருமான சிவசக்தி ஆனந்தன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

போர் முடிவடைந்து 11 வருடங்கள் கடந்துள்ள நிலையில், போரில் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. அத்துடன், நீண்டகாலமாக வடமாகாணம் அபிவிருத்தியில் பின்தங்கிய நிலையில் இருக்கின்றது. இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி இருக்கின்றனர். 50 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகள் தேவையாக இருக்கின்றன.

எனவே, அவற்றை பூர்த்திசெய்வதற்கு வடமாகாண சபைக்கு பூரண அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். அத்துடன், வடபகுதிக்கு விசேடமான நிதி ஒதுக்கீட்டை செய்யவேண்டிய தேவையும் இந்த அரசாங்கத்திற்கு இருக்கின்றது. எனவே, இவற்றை செய்விப்பதற்கு ஓர் உறுதியான தலைமைத்துவம் தமிழர்களுக்கு வேண்டும்.



அந்தவகையில் மூன்றாம் தரப்பின் அனுசரணையுடன் அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளை நான்கு கட்சிகளின் ஒன்றிணைவில் போட்டியிடும் தமிழ்மக்கள் தேசிய கூட்டணி நிச்சயம் எடுக்கும்.

இந்த விடயங்களுக்கான தீர்வுகளை காண்பதற்காகவே கடந்தமுறை இடம்பெற்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 15 ஆசனங்களை மக்கள் வழங்கியிருந்தார்கள். அவர்கள் நல்லாட்சி அரசாங்கத்துடன் தேனும் பாலுமாக இருந்தார்கள். அந்த காலப்பகுதிகளில் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பல சந்தர்ப்பங்கள் இருந்தன. எனினும், அவர்கள் அதனை சரியாக பயன்படுத்தவில்லை.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்காக சர்வதேசத்துடன் பேசுவதற்கு 20 ஆசனங்களை மக்கள் வழங்கவேண்டும் என்று கூட்டமைப்பின் தலைவர் கூறுகின்றார். ஏற்கனவே மக்கள் வழங்கிய ஆணையின்படி சர்வதேச சமூகத்துடன் பேசவேண்டிய சந்தர்ப்பங்களை பயன்படுத்தாமல் அரசுக்கு காலநீடிப்பை வழங்கி அனைத்தையும் நீர்த்துபோகச் செய்தவர்கள் தற்போது அதிக ஆசனங்களை மீண்டும் கேட்கின்றனர்.

இந்த நிலையிலேயே நாம் புதிய கூட்டணியில் களமிறங்கியுள்ளோம். அதற்கான மக்கள் ஆதரவு எமக்குத் தேவையாக இருக்கின்றது.

அரசு சார்பான கட்சிகளுக்கும், அரசாங்கத்திற்கும் மறைமுகமாக ஆதரவை வழங்குபவர்களுக்கு தமிழ் மக்கள் வாக்கை வழங்கவேண்டிய தேவையில்லை. சிங்கள் மக்கள் தமது பிரதிநிதிகளையும், முஸ்லிம் மக்கள் முஸ்லிம் பிரதிநிதிகளையும் தமிழ் மக்கள் தமிழ்ப் பிரதிநிதிகளையும் தெரிவுசெய்ய முடியும்.

எனவே, தமிழ் மக்கள் கடந்த 20 வருடங்களாக ஆதரவு வழங்கிவந்த அந்தக் கட்சியையும் சின்னத்தையும் முற்றாக நிராகரித்து எம்மை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன், தமிழ் மக்கள் மத்தியிலுள்ள அரசியல் வெற்றிடத்தை நிரப்புவதற்கு முதுகெலும்புள்ள இராஜதந்திரமாக செயற்படக்கூடிய அரசியல் தலைவர்களை தெரிவுசெய்யவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது – என்றார்.



முன்னாள் பிரதி சபாநாயகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சிவசிதம்பரத்தின் 97ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு எம்.கே.சிவாஜிலிங்கம் நெல்லியடி சந்தியில் அமைந்துள்ள அவரது உருவச்சிலைக்கு நேற்று மலர்மாலை அணிவித்த போது....

**(யாழ்)**

## மீன்பிடிக் கலங்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கான உடன்படிக்கை கைச்சாத்து

**(யாழ்)**

மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தைப் பயன்படுத்தும் மீன்பிடிக் கலங்ளுக்கு எரிபொருள் வழங்குவதற்கான உடன்படிக்கை நேற்று கைச்சாத்திடப்பட்டது.

கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனத்துக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் நீண்டகாலமாக இருந்துவந்த மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் தொழிலாளர்களின் பாவனைக்காக விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அத்துறைமுகம் அபிவிருத்திசெய்யப்பட்டு பலநாள் மீன்பிடிக் கலங்கள் உள்ளிட்ட பல மீன்பிடிக் கலங்கள் அத்துறைமுகத்தில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் நிலையில், அங்கு எரிபொருள் நிரப்புவதில் சிக்கல்நிலை உருவாகியிருந்தது.

இந்நிலையில், அத்துறைமுக நிர்வாகத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு குறித்த விடயத்தை கொண்டு வந்திருந்தனர்.

இந்நிலையிலேயே நேற்று எரிபொருள் வழங்குவதற்கான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த உடன்படிக்கையில் இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபன முகாமைத்துவப் பணிப்பாளர் வடிவேலு சத்தியநாதன் - இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் இடையே கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42, தொலைபேசி : 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com

# பிரதமரின் பேச்சில் ஒரு நியாயம் இருக்கிறது!

சர்வதேச ஒப்பந்தமொன்றிலிருந்து ஒரு நாடு திடீரென விலகுவது இலேசான விடயமல்லவென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மஹியங்கனையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார். மறுபுறம் கொழும்புத் துறைமுக கிழக்கு முனைய அபிவிருத்தித் திட்டத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரமொன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

மிலேனியம் சவால் ஒத்துழைப்பு ஒப்பந்தம் மற்றும் இந்தியாவுக்கான இந்தத் துறைமுக அபிவிருத்தி ஒப்பந்தம் என்பன தொடர்பில் தேர்தல் மேடைகளில் விமர்சனங்கள் அரசு மீது முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், பிரதமர் மஹிந்தவின் மேற்படி கருத்து உற்றுநோக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

மிலேனியம் சவால் ஒப்பந்தம் இப்போதைக்கு கவனத்திற்கொள்ளப்படமாட்டாதென தெரிகிறது. கிடப்பில் போடப்பட்டு தேர்தலுக்குப் பின்னர் இதுதொடர்பில் ஆராயப்படலாம். ஆனால், துறைமுக விவகாரத்தில் இழுத்தடிப்புச் செய்யமுடியாத நிலையில் அரசு இருப்பதாகவே தெரிகிறது. கொழும்புத் துறைமுக கிழக்கு முனைய அபிவிருத்தியை இந்தியாவிடம் வழங்க கடந்த ஆட்சிக்காலத்தில் உறுதியளிக்கப்பட்டது. ஜப்பானும் அதில் சிறு பங்களிப்பைச் செய்தாலும் காலப்போக்கில் அக்கறை காட்டவில்லை. இருந்தாலும் இந்தியா அபிவிருத்திச் செயற்பாடுகளை செய்வதில் அக்கறையுடன் இருந்தது.

ஆனாலும், அந்தக் கிழக்கு முனைய கொள்கலன் இறங்குதுறையில் பொருத்தவென சீனாவின் கிரேன்கள் கொண்டுவரப்பட்டதால் சர்ச்சை எழுந்து சில வாரங்களுக்கு முன்னர் அது வேலைநிறுத்தம் வரை சென்றது. சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்ட கிரேன்கள் இந்தியாவின் அபிவிருத்தி நடக்கவுள்ள முனையத்தில் பொருத்தப்பட்டால் அபிவிருத்திப் பணிகளிலிருந்து வெளியேறிவிடுவோமென இந்தியா இராஜதந்திர ரீதியில் இலங்கையை எச்சரித்திருந்ததாகவும் சொல்லப்பட்டது. துறைமுக தொழிற்சங்கங்கள் அப்போது பிரதமருடன் நடத்தப்பட்ட பேச்சுகளின் பின்னர் - தேர்தலுக்குப் பின்னர் இந்த விடயத்தை ஆராய தீர்மானிக்கப்பட்டது. அந்தப் பின்னணியில் பிரதமரின் இந்தக் கருத்து இப்போது வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதமர் மஹிந்தவின் இந்தக் கூற்று இலேசானதொரு விடயமல்ல. ஒரு நாடு இன்னொரு நாட்டுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தமொன்றை எழுந்தமானத்தில் இரத்துச்செய்துவிட முடியாது. இரண்டு நாடுகள் வெறுமனே ஒரு சாதாரண விடயங்களுக்காக ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்போவதில்லை. இரண்டு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் வகையில்தான் அவை இருக்கும். துறைமுக அபிவிருத்தி போன்ற பணிகளில் வெறுமனே ஒரு நாட்டுக்கு மட்டும் பயன் ஏற்படும் வகையில் ஒப்பந்தங்கள் அமையப்போவதில்லை.

இலங்கையின் துறைமுகத்திற்கு வந்துசெல்லும் கப்பல்களில் பெரும்பான்மை வீதத்தை இந்திய சரக்குக் கப்பல்கள் கொண்டுள்ளன. சர்வதேச கடற்பரப்பின் ஊடாக அவை செல்ல முன்னரும், சரக்கு இடமாற்றல் செயற்பாடுகளுக்கும் கொழும்புத் துறைமுகத்தை அதிகளவான இந்தியக் கப்பல்கள் பயன்படுத்துகின்றன. இதனால் பெருமளவு வருமானம் இலங்கைக்கு வருகிறது. இங்கு முக்கியமாக ஒரு விடயத்தை கவனத்திற்கொள்ளல் வேண்டும். இந்தியாவின் தென்கோடி மாநிலமான கேரளத்தின் தலைநகரம் திருவனந்தபுரத்தில் அரபிக்கடல் ஓரத்தில் புதியதாக விழிஞ்சம் துறைமுகம் கட்டமைக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டப்பணிகளின் மொத்தச் செலவீனம் மூன்று கட்டங்களில் இந்திய ரூபாக்களில் 6,595 கோடிகளாக திட்டமிடப்பட்டுள்ளது. அநேகமாக இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் இவை கட்டிமுடிக்கப்பட்ட பின்னர் உலகின் மிகப்பெரிய துறைமுகங்களில் ஒன்றாக இது இருக்குமென மதிப்பிடப்படுகிறது. விழிஞ்சம் துறைமுகப் பகுதி சர்வதேச கடற்பாதையிலிருந்து 10 கடல்வழி மைல்களையும் கடலோரத்திலிருந்து ஒரு கடல்வழி மைல் தொலைவையும் கொண்டுள்ளது.

இந்தப் பின்னணியில், ஏதோ ஒரு காரணத்திற்காக கொழும்புத் துறைமுக அபிவிருத்திப் பணிகளிலிருந்து இப்போது இந்தியா விலகினால் கொழும்பினூடாக செல்லும் சரக்குக் கப்பல்களை எதிர்காலத்தில் மேற்படி விழிஞ்சம் துறைமுகத்தினூடாக அனுப்ப நடவடிக்கையை நிச்சயம் மேற்கொள்ளும். அப்போது வருமானமிழந்து பெரும் பொருளாதார பாதிப்பை இலங்கை சந்திக்கலாம். இந்தியக் கப்பல்களின் 70 வீதமானவை இலங்கைக்குள் வந்து செல்வது நிறுத்தப்பட்டால் வேறு நாடுகள் ஏதாவது அதற்கு மாற்றீடுகளை செய்யுமா? உங்கள் வருமானம் பாதிக்கக்கூடாது என்பதால் எங்கள் கப்பல்களை உங்கள் துறைமுகம் ஊடாக அனுப்புகிறோம் என்று அவை சொல்லுமா? அதெல்லாம் சாத்தியப்படக்கூடிய பேச்சுகளா?

எனவேதான் தொலைநோக்கை கருத்திற்கொண்டு பிரதமர் மஹிந்த அப்படியான ஒரு கருத்தை தேர்தல் மேடையில் தெரிவித்திருக்கக்கூடும். பொருளாதார ரீதியாக இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்த இந்தியா பகிரங்கமாக விரும்பாதபோதிலும் அந்த நாட்டின் பிராந்திய ரீதியான சவால்களை எதிர்கொள்ளும்போது எடுக்கப்படும் நடவடிக்கைகளில் நமது நாட்டுக்கு அடிவிழாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது நமது நாட்டினதும் தலைவர்களினதும் பொறுப்பல்லவா? அந்தப் பொறுப்பை உணர்ந்து பிரதமர் பேசியிருந்தால் அது வரவேற்கக்கூடியதே...!

# தமிழ் மொழியின் சட்டப்படியான உரிமை எப்போது நடைமுறைக்கு வரும்?

- த.மனோகரன் -

ஒரு நாட்டின் தேசிய இனமொன்று உரிமையுடன் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும். பல தேசிய இனங்கள் அந்நாட்டின் குடிமக்களாயிருப்பின் அவற்றுக்கிடையே எதுவித ஏற்றத்தாழ்வுகளுமற்ற சமத்துவம் பேணப்படவேண்டும். எக்காரணம் கொண்டும் பெரும்பான்மையினத்தவர், சிறுபான்மையினத்தவர் என்றோ அன்றி வேறு ஏதாவது ஏற்றத்தாழ்வுகளோ காட்டப்படக்கூடாது. அது நாட்டின் அரசியல் அமைப்பினூடாகவும் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அப்போதுதான் நாட்டில் இனங்களுக்கிடையே வேறுபாடற்ற உறவுநிலை பேணப்படும்.

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசாகிய நமது நாட்டின் அரசியலமைப்பில் உயர்ந்த கோட்பாடுகள் பல உள்ளடக்கப்பட்டிருப்பினும், நடைமுறையில் அவை பேணப்படாமை தேசிய இனங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வுகளையும் அதன்மூலம் பல பாதக நிலைமைகளையும் ஏற்படுத்தியுள்ளன. சட்டத்தின்முன் சகலரும் சமன் என்ற கோட்பாடு நடைமுறையில் அர்த்தமற்றதாகவே காணப்படுகின்றது. இதுதொடர்பில் கவனம் செலுத்தவேண்டிய பொறுப்பு சமூகங்கள், அரசியல்வாதிகளுடையது.

ஏனென்றால், இன்று நாட்டை ஆள்பவர்கள், சட்டத்தைச் செயற்படுத்த தூண்டுதலாயிருப்பவர்கள் அரசியல்வாதிகளே. அதுவும் மக்களால் நாடாளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் போன்ற அரசியல் நிர்வாக அமைப்புகளுக்குத் தெரிவுசெய்யப்படுபவர்களேயாவர்.

பல நாடுகளாகப் பிளவுபட்டு ஆளப்பட்ட இலங்கைத் தீவு ஐரோப்பியர் ஆட்சியில் ஒன்றிணைக்கப்பட்டது. இவ்வாறு ஒன்றிணைக்கப்பட்ட இலங்கையை 1948இல் பிரித்தானியர் சுதந்திரம் என்ற பெயரில் சுதேசிய பெரும்பான்மையினத்தவரிடம் ஒப்படைத்தனர். சுதந்திரம் என்பது பெரும்பான்மையினர் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறிப்பது என்ற தவறான அர்த்தத்தை உள்வாங்கிய சுதந்திர இலங்கையின் ஆட்சியாளர்கள் முதலில் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் வாக்குரிமை, குடியுரிமையைப் பறித்து அவர்களை நாடற்றவராக்கினர்.

அடுத்து 1956 ஜூன் மாதம் 5ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்ற சட்டத்தின்மூலம் இந்நாட்டின் ஒட்டுமொத்த தமிழர்களது உயிர்மூச்சான மொழியுரிமையைப் பறித்தனர். அதன் பின்விளைவுகளாக நாட்டில் பல இனவெறிப் பயங்கரவாதச் செயற்பாடுகள் இடம்பெற்று பெருமளவு உயிரிழப்புகளும், சொத்திழப்புகளும் ஏற்பட்டன. அதன் உச்சக்கட்டமாக இந்நாட்டில் இடம்பெற்ற ஆயுதப் போராட்டத்தின் விளைவாக, இந்தியாவின் தலையீடும் அதைத்தொடர்ந்து சர்வதேச விசாரணை வரை நீண்டுள்ளது.

1956ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் தனிச்சிங்கள அரசகரும மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது, அது நாட்டின் நலனுக்கு மற்றும் பாதுகாப்புக்கு பாதிப்பாக அமையுமென்று பல சிங்களத் தலைவர்களான கலாநிதி என்.எம்.பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர்.டீ.சில்வா, எட்மன்ட் சமரக்கொடி ஆகியோர் எதிர்த்துக் குரல் எழுப்பினர். குறித்த சட்டத்தின் பின்விளைவாக நாட்டில் பிரிவினைவாதம் தலைதூக்கும், நாட்டின் ஒற்றுமைக்கும் பாதிப்பு ஏற்படும் என்று அன்று சிங்களத் தலைவர்கள் எடுத்துக்கூறியது செவிடன் காதில் ஊதிய சங்குபோல் பயனற்றதாகியது.

இந்நாடு அனைவருக்கும் சமனான நாடாக இருக்கவேண்டுமென்றால், இரு மொழிகளான தமிழுக்கும், சிங்களத்திற்கும் சமநிலை வழங்கவேண்டும். ஒரு மொழியை மட்டும் அரசகரும மொழியாக்கினால் நாடு பிளவுபட வழியேற்படும் என்பதை ஒரு நாடென்றால் இருமொழிகள், இரு நாடுகளென்றால் ஒரு மொழியென்று நாடாளுமன்றத்தில் கலாநிதி கொல்வின் ஆர்.டீ.சில்வா உரத்து எடுத்துக்கூறியது பதிவிலுள்ளது. அதுமட்டுமல்ல, 1955 ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இலங்கையின் அரசகரும மொழிகளாகச் சிங்களமும் தமிழும் இருக்கவேண்டுமென்று கலாநிதி என்.எம்.பெரேரா பிரேரணை கொண்டுவந்ததும் அதை எட்மண்ட் சமரக்கொடி வழிமொழிந்ததும் பதிவிலுள்ளன.

> “சுதந்திரம் என்பது பெரும்பான்மையினர் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறிப்பது என்ற தவறான அர்த்தத்தை உள்வாங்கிய சுதந்திர இலங்கையின் ஆட்சியாளர்கள் முதலில் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் வாக்குரிமை, குடியுரிமையைப் பறித்து அவர்களை நாடற்றவராக்கினர்”

> “தமிழ் மொழிக்கு அரசியலமைப்பில் உரிய உரிமை வழங்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேல் கடந்துவிட்ட நிலையிலும் 1956ஆம் ஆண்டு அதாவது 65 ஆண்டுகளுக்கு முன் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்கள சட்டவிதிகளே இன்றும் நடைமுறையிலுள்ளமையை அவதானிக்க முடிகின்றது”

தான்தோன்றித்தனமாக, ஒருதலைப்பட்சமாக 1956இல் கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டுமே நாட்டின் ஒரே ஆட்சி மொழியென்ற சட்டம் 1987இல் மாற்றியமைக்கப்படவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தமது நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பயன்படுத்திக்கொண்டு வந்த மொழிச் சட்டத்தைத் தொடர்ந்தும் தக்கவைக்க முடியாத நிலை இலங்கையின் ஆட்சியாளருக்கு ஏற்பட்டது. அண்டைநாடான இந்தியாவின் தலையீட்டால், 1956ஆம் ஆண்டின் தனிச் சிங்கள ஆட்சி மொழிச் சட்டம் கைவிடப்பட்டு இந்நாட்டின் அரசகரும மொழியாகச் சிங்களத்துடன் தமிழும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1981ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் 13 மற்றும் 1988ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கத் திருத்தங்களின் மூலம் இலங்கை முழுமைக்குமான தேசிய மொழிகளாகத் தமிழும் சிங்களமும் இருத்தல் வேண்டுமென்று ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், நாடு முழுமைக்குமான அரசகரும மொழிகளாகத் தமிழும் சிங்களமும் இருப்பதுடன், ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்குமென்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் முதன்மை நிர்வாக மொழி தமிழாக இருப்பதுடன், ஏனைய ஏழு மாகாணங்களின் முதன்மை நிர்வாக மொழி சிங்களமாக இருப்பினும், ஒரு குடிமகன் நாட்டின் எந்தவொரு அரச அலுவலகத்திலும் தான் விரும்பும் எந்தவொரு மொழியிலும் தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் உரிமை உண்டென்றும் கூறப்பட்டுள்ளது. முதன்மை நிர்வாக மொழியாகக் குறிப்பிடப்பட்டுள்ள மாகாணங்களிலுள்ள ஏதாவது பிரதேச செயலகப் பிரிவுகளில் மற்றைய மொழியினர் கணிசமான அளவினர் வசிப்பின் அப்பிரதேச செயலகப் பிரிவுகளை இருமொழிப் பிரதேச செயலகப் பிரிவுகளாக ஜனாதிபதி பிரகடனப்படுத்தலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. அதன்படி ஏற்கனவே நாற்பத்தொரு பிரதேச செயலகப் பிரிவுகள் இருமொழிப் பிரதேச செயலகப் பிரிவுகளாக அன்றைய ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், முப்பத்தொரு பிரதேச செயலகப் பிரிவுகள் இருமொழிப் பிரதேச செயலகப் பிரிவுகளாகப் பிரகடனப்படுத்தலாம் என்று அடையாளம் காணப்பட்டுள்ளபோதிலும், கடந்த ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக அது கிடப்பில் போடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது.

2009.11.09ஆம் திகதி பொது நிர்வாக அமைச்சால் சுற்றுநிருபம் மூலமும், வர்த்தமானி மூலமும் அரச நிறுவனங்களில் அரச கருமமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்காக வழிகாட்டல் வெளியிடப்பட்டது. 10 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் அது கவனிப்பாரற்ற நிலையில் கிடப்பில் போடப்பட்டுள்ளது. சுற்றறிக்கைகளையும் வர்த்தமானிகளையும் வெளியிட்ட அரச தரப்பு, அது தொடர்பில் அலட்டிக்கொள்ளவில்லை.




தமிழ் மொழிக்கு அரசியலமைப்பில் உரிய உரிமை வழங்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேல் கடந்துவிட்ட நிலையிலும் 1956ஆம் ஆண்டு அதாவது 65 ஆண்டுகளுக்கு முன் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்கள சட்டவிதிகளே இன்றும் நடைமுறையிலுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

இனத்துவப் பிரதிநிதித்துவம் பற்றி பேசும் நமது தமிழ் அரசியல் பிரதிநிதிகளோ அரசியல்வாதிகளோ தமிழ் மொழியின் நடைமுறை உரிமைகளை நிலைநாட்டி உறுதிப்படுத்த என்ன செய்தார்கள் என்று கேட்கும் உரிமை ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்திற்கு முட்டுக்கொடுத்த வடக்கு, கிழக்கு தமிழ்ப் பிரதிநிதிகளாகட்டும் ஏனையவர்களாகட்டும் இனியாவது தமிழ் மொழிக்கு அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை நடைமுறைப்படுத்தி தமிழ் மக்கள் இந்நாட்டில் தலைநிமிர்ந்து வாழ வழிசெய்ய எத்தனிப்பார்களா? என்பது கேள்விக்குறியாகும்.

## கண்டதும்... கேட்டதும்... பார்த்ததும்...!



கொரோனா வந்தது தான் வந்தது... வகை வகையாக முகக் கவசங்கள் வந்திருக்கின்றன... சிறுவர்கள் ஸ்பைடர்மேன் படம் பொறிக்கப்பட்ட முகக் கவசங்களையும் சிறுமிகள் டோரா, மற்றும் அவர்களின் விருப்புக்குரிய படங்கள் பொறிக்கப்பட்ட முகக்கவசங்களையும் அணிவதையும் காண முடிகிறது... அதற்குள் அரசியல்வாதிகள் சின்னங்களை பொறித்து தனி வழியில் பிரசாரம்...

இப்போதெல்லாம் தேசிய அடையாள அட்டை இருக்கிறதோ இல்லையோ ஒருவரிடம் பேஸ் மாஸ்க் கட்டாயம் இருக்க வேண்டும்... சரி.. அது இருக்கட்டும்.. அலுவலகத்தில் ஒருவர்... முகக் கவசம் கசங்கி இருக்கிறது என்று அதனை அயர்ன் பண்ணினாராம்.. பின்னர் என்ன நடந்ததென்று சொல்லத்தான் வேண்டுமா?

- சிவ் -

## வவுனியாவில் சட்டவிரோத மரக்கடத்தல்: விசேட அதிரடிப்படையினரால் முறியடிப்பு!





(வவுனியா)

மன்னார் மடு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முள்ளிக்குளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் முன்னெடுக்கப்பட்ட மரக்கடத்தல் நடவடிக்கையொன்று வவுனியா புளியங்குளம் விசேட அதிரடிப் படையினரால் முறியடிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் காலை 6 மணியளவில் முள்ளிக்குளம் காட்டுப் பகுதியிலிருந்து சட்டவிரோதமான முறையில் மரங்கள் கடத்தப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலுக்கமைய அப்பகுதிக்குச் சென்ற வவுனியா புளியங்குளம் விசேட அதிரடிப்படையினர் வாகனம் ஒன்றில் கடத்திச்செல்லப்பட்ட 13 முதிரை மரக்குற்றிகளை மீட்டுள்ளதுடன், அதனை கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட கெப் ரக வாகனத்தையும் கைப்பற்றினர்.

எனினும், வாகனத்தின் சாரதி தப்பிச்சென்றுள்ள நிலையில் அதன் உரிமையாளர் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மீட்கப்பட்ட மரக்குற்றிகள் மற்றும் வாகனம் என்பன நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக வவுனியா மாவட்ட வனவள திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# அரசியல் ஜாம்பவான்கள் தோல்விக்கு மத்தியில் தேசிய பட்டியலில் நாடாளுமன்றம் வர முயற்சி!

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மெதகமவில் தெரிவிப்பு





அரசியலில் ஜாம்பவான்கள் எனக் கூறிய அரசியல்வாதிகள் இம்முறை பொதுத் தேர்லில் முழுமையான தோல்விக்கு மத்தியில் தேசிய பட்டியலில் நாடாளுமன்றத்திற்கு வருவதற்கு முயற்சிப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை மொனராகல மெதகம ஆர்.எம்.குணசேன மைதானத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போது பிரதமர் இதனை சுட்டிக் காட்டியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது:

ஐக்கிய தேசிய கட்சி ரணில் - சஜித் என பிளவுபட்டுள்ளதன் மூலம் தோல்வியை ஏற்றுக்கொண்டுள்ளது. மொனராகலை மாவட்டத்தில் சில அரசியல்வாதிகள் மக்களுக்கு சேவை செய்யாமல் தங்கள் வளர்ச்சியை மாத்திரம் கருத்திற்கொள்வதனால் மக்களுக்கு முகங்கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அவ்வாறான அரசியல்வாதிகளுக்கு இம்முறை மக்களின் வாக்குகள் ஒருபோதும் கிடைக்காதென்பதை அரசியல்வாதிகள் அறிந்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஏற்பட்ட அழுத்தம் காரணமாக தாமரை மொட்டு சின்னத்தின் கீழ் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை அமைத்து உள்ளூராட்சி தேர்தலில் வெற்றிபெறுவதற்கு மொட்டு கட்சியால் முடிந்தது.

புதிய கட்சி ஒன்றை உருவாக்கினால் ராஜபக்ஷாக்கள் நடுவீதிக்கு செல்ல நேரிடும் என கூறியவர்களை இணைத்துக்கொண்டு இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடக் காரணம், நாட்டை அபிவிருத்தி நோக்கி கொண்டுசென்று பொருளாதாரத்தை மேற்கொண்டு புதிய அத்தியாயமொன்றை உருவாக்க வேண்டும் என்பதே. நாட்டின் அரசியலை விற்பனைசெய்யும் ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக புதிய சக்தியொன்றை கட்டியெழுப்ப வேண்டும்

எதிர்கால சந்ததியினருக்காக புதிய தொழிற்சாலைகளை உருவாக்குதல், விவசாயம் உட்பட பயிர்செய்கைகளை வளர்ச்சியடையச்செய்தல், தொழில்நுட்ப கல்வி ஊடாக தொழில்களை உருவாக்குதல் உட்பட பொறுப்புடன் நாட்டை வளர்ச்சியடையச்செய்யும் திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது - என்றும் குறிப்பிட்டார் பிரதமர்.

## தனியார் பஸ்கள் ரேஸ் - விபத்தில் சிக்கி சிப்பாய் பலி!



நுகேகொடை மேம்பாலத்திற்கு அருகில் இராணுவ கெப் ரக வாகனமொன்று விபத்துக்குள்ளானதில் இராணுவ சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்துள்ளனர்.

தனியார் பஸ்ஸொன்று மற்றுமொரு பஸ்ஸை மேம்பாலத்தில் முந்திச்செல்ல முற்படுகையில் இந்த விபத்து நடந்துள்ளது. காயமடைந்த சிப்பாய் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகைச்சை பலனின்றி உயிரிழந்தார். நுகேகொட பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.



மண்சரிவு காரணமாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொழும்புக்குள் பிரவேசிக்கும் பகுதி, இமதூவ மற்றும் பின்னதூவ பகுதிகளுக்கிடையில் நேற்றுக் காலை தற்காலிகமாக மூடப்பட்டது. சில மணி நேரங்களின் பின்னர் அங்கு வீதி சீர்செய்யப்பட்டு போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

## இலங்கையிலிருந்த இந்தியர்களை ஏற்றிக்கொண்டு ஆறாவது விசேட விமானம் புதுடில்லி புறப்பட்டது!



இலங்கையில் சிக்கியிருந்த 170 இந்தியப் பிரஜைகள் விசேட எயார் இந்தியா விமானம் மூலம் கொழும்பிலிருந்து புதுடில்லிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

கொவிட் -19 காரணமாக நாடு திரும்ப முடியாத நிலையில், உலகளவில் சிக்கியிருக்கும் இந்தியப் பிரஜைகளை இந்தியாவுக்கு அனுப்புவதற்கான இந்திய அரசின் "வந்தே பாரத் மிஷன்" திட்டத்தினுடைய நான்காவது கட்டத்தின் ஓர் அங்கமாக இந்த விமானப் பயணம் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இந்தியப் பிரஜைகளை சந்தித்திருந்த இந்திய பதில் உயர்ஸ்தானிகர் வினோத் கே. ஜேக்கப், அப்பயணிகளின் பாதுகாப்பான பயணத்துக்காக வாழ்த்துகளையும் பகிர்ந்திருந்தார்.

இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் மேற்கொள்ளப்பட்ட பதிவுகளின் அடிப்படையில் இந்த விமானத்திற்கான பயணிகள் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அவசரமாக நாடு திரும்ப வேண்டிய நிலையில் இருப்பவர்களுக்கு, குறிப்பாக, நிர்க்கதியாகியுள்ள குடிபெயர் தொழிலாளர்கள், விசா காலாவதியான நிலையில் தங்கியிருப்பவர்கள், மருத்துவ உதவிகள் தேவைப்படுவோர், கர்ப்பிணிகள், பெண்கள், முதியவர்கள், குடும்ப உறுப்பினரின் மரணத்தைத் தொடர்ந்து உடனடியாக இந்தியா திரும்புவதற்கு கோரிக்கைகளை முன்வைத்திருப்போர் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட தரப்பினருக்கு வெளிநாடுகளில் சிக்குண்டிருப்பவர்களுக்காக இந்திய உள்துறை அமைச்சால் வெளியிடப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட செயற்பாட்டு முறைமையின் பிரகாரம் முன்னுரிமை வழங்கப்படும்.

கொவிட் - 19 காரணமாக சர்வதேச பயணங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், நாடு திரும்பமுடியாமல் இலங்கையில் சிக்கியிருந்த இந்தியப் பிரஜைகள், சொந்தநாடு நோக்கிய தமது பயணம் குறித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தனர். கொழும்பிலிருந்து தூத்துக்குடிக்கு ஜூன் முதலாம் திகதி இந்திய கடற்படைக் கப்பல் ஐஎன்எஸ் ஜலஷ்வா கப்பற் சேவை, 2020 மே 29, ஜூன் 15, ஜூன் 22 ஜூலை 03 மற்றும் ஜூலை 08 ஆகிய திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட எயார் இந்திய விமான சேவைகள், ஏனைய பல விசேட விமான சேவைகள் மற்றும் இன்றைய விமான சேவை உட்பட்ட சேவைகள் மூலமாக 1800 இற்கும் அதிகமான இந்தியப் பிரஜைகள் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நாடு திரும்பமுடியாமல் இலங்கையில் தங்கியிருக்கும் இந்தியர்கள் இதுவரையில் தம்மை இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் இணையதளத்தில் பதிவுசெய்ய தவறியிருப்பின் கீழ்வரும் இணையத்தளத்தில் பதிவுசெய்யுமாறு கோரப்படுகிறார்கள் https://hcicolombo.gov.in/COVID_helpline நாடு திரும்ப முடியாமல் இலங்கையில் தங்கியிருக்கும் இந்தியப் பிரஜைகள் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் இணையதளம் மற்றும் சமூக ஊடகங்களில் பதிவிடப்படும் அறிவித்தல்களை அறிந்துகொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## 54 கோடா பீப்பாய்களுடன் மூவர் கைது



சீதுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அடுகம்ஓயாவில் சட்டவிரோதமாக போதைப்பொருள் தயாரிக்கப்படுவதாக வலான மத்திய குற்றத்தடுப்புப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய, முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது சட்டவிரோத போதைப்பொருள் தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் 10 ஆயிரத்து 206 லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த சட்டவிரோத போதைப்பொருள் தயாரிப்புடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.





நேற்று கொழும்பில் ஏற்பட்ட திடீர் மழை வெள்ள சேதங்களை கிருலப்பனை பகுதியில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மனோ கணேசன் நேரடியாக சென்று பார்வையிட்டார்.

பாதிப்பு தொடர்பில் உடனடியாக கொழும்பு மாவட்ட செயலாளர் பிரதீப், இடர் நிவாரண கொழும்புப் பிரிவு இயக்குனர் ஆகியோருக்கு அறிவித்து, சேதங்களை மதிப்பீடு செய்யுமாறும் மனோ இதன்போது கேட்டுக்கொண்டார்.

## இன்றைய ராசி பலன்கள்

21.07.2020 (செவ்வாய்க்கிழமை)

வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம்
சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

| | |
|---|---|
| மேஷம் - | அன்பு |
| ரிஷபம் - | செலவு |
| மிதுனம்- | தாமதம் |
| கடகம் - | முயற்சி |
| சிம்மம் - | ஜெயம் |
| கன்னி - | வெற்றி |
| துலாம் - | எதிர்ப்பு |
| விருச்சிகம் - | சிக்கல் |
| தனுசு - | பெருமை |
| மகரம் - | பயம் |
| கும்பம் - | சுபம் |
| மீனம் - | கடன் |

**சுப நேரம்**
காலை: 10.30 - 12.01
மாலை: 04.30 - 06.30

**இராகு காலம்**
03.01
04.31

**எம கண்டம்**
09.01
10.31

# வவுனியாவில் பொதுஜன பெரமுன கட்சியுடன் இணைந்தனர் கூட்டமைப்பு ஆதரவாளர்கள்





(வவுனியா)

பொதுஜன பெரமுன கட்சியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீவிர ஆதரவாளர்கள் 22 பேர் இணைந்துகொண்டனர்.

பொதுஜன பெரமுன கட்சி சார்பாக வன்னியில் போட்டியிடும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் தர்மபால செனவிரட்னவுடன் குறித்த 22 பேரும் இணைந்துகொண்டனர்.

வவுனியா, குட்டி நகர் மற்றும் மகாறம்பைக்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தாம் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் அதன் பங்காளிக் கட்சியான ரெலோவிற்கும் ஆதரவு வழங்கி வந்ததாகவும், குறித்த கட்சியின் செயற்பாடுகளில் அதிருப்தியடைந்துள்ள நிலையில் தாம் பொதுஜன பெரமுனவுடன் இணைந்துள்ளதாகவும் இதன்போது அவர்கள் தெரிவித்தனர்.

# ஐக்கிய மக்கள் சக்தி வாடகைக்கு வாங்கப்பட்ட கட்சி: தலைமைத்துவமும் இல்லை; கொள்கையும் இல்லை!

## - பரிகசிக்கிறார் நவீன்

(தலவாக்கலை)

ஐக்கிய மக்கள் சக்தியானது வாடகைக்கு வாங்கப்பட்ட கட்சியாகும். அந்தக் கட்சிக்கென கொள்கைகள் கிடையாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார். கொத்மலை நவ திஸ்பன பகுதியில் நேற்று இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

"ஐக்கிய தேசியக் கட்சிக்கென ஒரு கட்டமைப்பு இருக்கின்றது. அது எமது கலாசாரம், மதம். ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியென்பது, அதிக தலைவர்கள் உள்ள கட்சியாகும். சிலர் சஜித்தை தலைவர் என்கின்றனர். மேலும் சிலர் சம்பிக்கவை தலைவர் என்கின்றனர். ஆனால், உறுதியான தலைவர் ஒருவர் இல்லாத கட்சியாகும். எனது தந்தை ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறியபோது புதிய கட்சியொன்றை உருவாக்கினார். ஆனால், சஜித் அணியினர் கட்சியொன்றை வாடகைக்கு வாங்கியுள்ளனர். அந்தக் கட்சிக்கு கொள்கை இல்லை, இரண்டாம் தலைமைத்துவமும் இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக பல



கட்சிகள் உருவாகலாம். அவற்றுக்கு ஆயுள் இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியை எவராலும் அழிக்கமுடியாது. 1950களில் பண்டார நாயக்க வெளியேறினார். சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் கை சின்னம் இருந்தது. அதன் பின்னர் கதிரை, வெற்றிலை என இன்று மொட்டு சின்னத்தில் வந்து நிற்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இதே நிலைமையை ஏற்படுத்தவே முயற்சிக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தியில் சஜித்துக்கும், சம்பிக்கவுக்குமிடையில் அதிகாரப்போட்டி ஆரம்பித்துவிட்டது. நிதி பலத்தைப் பலப்படுத்தி சஜித் பக்கம் உள்ள உறுப்பினர்களை பாட்டாளி வாங்கிவிடுவார். அடுத்த ஜனாதிபதி வேட்பாளராவதே அவரது இலக்காகும். எமது கட்சியிலும் மறுசீரமைப்பு அவசியம். அதனை நிச்சயம் செய்வோம்" - என்றார்.




# அபிவிருத்தியென்பது வார்த்தையில் மட்டுமல்ல செயலில்; அதற்காகவே அரசியலுக்கு வந்தேன் என்கிறார் பிரபு



மலையகத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும். அதற்காகவே நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய ஆட்சியின் கீழ் நிச்சயமாக மாற்றத்தை ஏற்படுத்துவோம் - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் முத்தையா பிரபு தெரிவித்தார்.

லிந்துலை பெயார்வெல் தோட்டத்தில் நேற்று இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அவரின் அபிவிருத்தி செயற்றிட்டங்களை எமது பகுதியிலும் நடைமுறைப்படுத்தவேண்டும். அபிவிருத்தி என்பது வார்த்தையில் மட்டுமல்ல, செயலிலும் இருக்கவேண்டும் என்பதற்காகவே நான் அரசியலில் குதித்துள்ளேன். தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை வழங்கிவிட்டு பலரும் ஏமாற்றுவார்கள். ஆனால், செய்துகாட்டுவதற்காகவே நாம் அரசியலுக்கு வந்துள்ளோம்.

வருமானமின்மையே எமது மக்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையாகும். அந்த வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கான வழிமுறைகள் இங்கில்லை. அதற்கான திட்டங்களையும் அரசியல்வாதிகள் கொண்டுவரவில்லை. நுவரெலியா மாவட்டத்தில் தொழிற்சாலைகள் இருந்தால் வெளிமாவட்டங்களுக்கு வேலைக்கு செல்ல வேண்டியதில்லை. அவ்வாறான தொழிற்சாலைகளை கொண்டு வருவதற்கும் கடந்தகாலங்களில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இவ்வாறான திட்டங்களையே நாம் கொண்டுவரவுள்ளோம். தொழிற்சாலைகளை உருவாக்கினால் உதிரி தொழில்களும் கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும். வீட்டின் அபிவிருத்தி கூடினால் மட்டுமே அபிவிருத்தி என்பது அர்த்தமுடையதாக இருக்கும். இவ்வாறான அரசியல் மாறவேண்டும். அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவே நான் வந்துள்ளேன். எனக்கும் வாய்ப்பு தந்து பாருங்கள், நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்துவேன்" - என்றார்.

# பதுளையில் கடும் மழை

(பதுளை)

பதுளை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியான கடும் மழை பெய்து வருகின்றமையால் மக்களின் இயல்புவாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. மேலும், நேற்று அதிகாலை பெய்த அடை மழையுடன் கடும் பனிமூட்டமும் நிறைந்து காணப்பட்டது.



அத்தோடு வழமைக்கு மாறாக அதிக குளிர்கால நிலைமையும் உணரக் கூடியதாகவிருந்தது என பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர். இதன்காரணமாக பெருந் தோட்டத் தொழிலாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகினர் எனவும் தெரிவிக்கின்றனர்.

மேலும், பிரதான வீதிகளிலும் பனிமூட்டம் சூழ்ந்து காணப்பட்டதால் வாகனச் சாரதிகள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியதாக அறியமுடிகின்றது. எனவே, மிகுந்த அவதானத்துடன் வாகனத்தை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸாரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

# குற்றச்செயல்களை ஒழிக்க கடுமையான சட்டங்கள்: அதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையே தேவை

## -என்கிறார் சரத் ஏக்கநாயக்க



(கண்டி)

எமது நாட்டைக் கட்டியெழுப்ப தடையாக இருக்கும் போதைப்பொருள் பாவனையாளர்கள், திட்டமிட்ட குற்றச் செயல் புரிவோர், ஊழல் புரிவோர் போன்றவர்களது நடவடிக்கைகளை ஒழிக்க கடுமையான சட்டதிட்டங்கள் தேவை. அதனைக் கொண்டுவர நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வேண்டும். எதிர்வரும் பொதுத் தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு பொதுஜன பெரமுனவுக்கு வாக்களிக்கவேண்டும் - என முன்னாள் மத்திய மாகாண முதலமைச்சரும் கண்டி மாவட்ட பொதுஜன பெரமுன வேட்பாளருமான சரத் ஏக்கநாயக்கா தெரிவித்தார்.

கண்டி மடவளை நகரில் இடம்பெற்ற அரசியல் பிரசாரக் கூட்டமொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டைக் கட்டியெழுப்புவதில் சில தடைகள் இருக்கின்றன. குறிப்பாக, போதைப்பொருள் கடத்தல், பாதாள உலகத்தினரின் குற்றச்செயற்பாடுகள், சிறைக்கூடங்களில் காணப்படும் ஊழல்கள் போன்ற விடயங்கள் சில வெளிச்சத்துக்கு வந்துள்ளன. எனவே, அவற்றை திருத்தியமைக்காது நாட்டைக் கட்டியெழுப்பமுடியாது. எனவே, அவற்றை மாற்றியமைக்க தமக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை நாடாளுமன்றில் தேவையென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கேட்டுள்ளார். எனவே, அவரின் கரத்தைப் பலப்படுத்தும் விதத்தில் வாக்களிக்கவேண்டும்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட நெருக்கடியின்போது 5,000 ரூபா கொடுப்பனவு வழங்குதல் உட்பட கொவிட் - 19 தொற்று பரவாது பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. மேலும், திட்டமிட்ட குற்றச்செயல்கள் புரிபவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இப்படியான நிலைகளுக்கு நாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். எனவே, நன்றிகூறும் வகையில் ஜனாதிபதியின் கரத்தைப் பலப்படுத்த பொதுஜன பெரமுனவுக்கு வாக்களிக்கும்படி வேண்டுகிறேன்" - என்றார்.

# நிரந்தர நியமனம் வழங்குமாறு ஆசிரிய உதவியாளர்கள் கோரிக்கை

(தலவாக்கலை)

மலையக பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு 2015.05.19 அன்று ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள் தற்போது தமது ஆசிரிய பயிற்சியை நிறைவுசெய்துள்ளபோதும் இதுவரை அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. கடந்த அரசாங்கத்தில் போட்டிப்பரீட்சை நடத்தப்பட்டு 2015, 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் பகுதி பகுதியாக நியமனம் வழங்கப்பட்டது. வர்த்தமானி அறிவித்தலில் ஆசிரியர் பயிற்சி நெறியை பூர்த்திசெய்தவுடன் இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டது. ஆனால், அதற்கான முன்னெடுப்புகள் எதுவும் இடம்பெறவில்லை.

இதன்படி நியமனம் பெற்றவர்களுக்கு முதலில் 6,000 ரூபா கொடுப்பனவாக வழங்கப்பட்டது. பின்னர் அத்தொகை 10,000 ரூபாவாக உயர்த்தப்பட்டது. இவர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவு நாளாந்த போக்குவரத்து செலவைக்கூட ஈடுகட்ட போதுமானதாக இல்லை. பாடசாலைகளில் ஏனைய ஆசிரியர்கள் செய்யும் கடமையையே இவர்களும் மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. ஆசிரிய உதவியாளர்கள் தங்களது பயிற்சியை நிறைவுசெய்து சுமார் இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதும் நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் அவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்குவதில் காலதாமதம் காணப்படுகின்றது. ஆனால், பதுளை, கண்டி, இரத்தினபுரி மாவட்டங்களில் ஆசிரிய உதவியாளர்களுக்கான நிரந்தரப்படுத்தல் துரிதமாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த வருடங்களில் இவ்வாசிரியர்கள் வேலை நிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுப்பட்டிருந்தனர்.

ஆனால், இதுவரையில் இவர்களுக்கான நிரந்தரமான தீர்வுகள் வழங்கப்படவில்லை. அத்துடன், வலயக் கல்வி காரியாலயங்களில் பயிற்சி சான்றிதழ்கள் அனைத்தும் வழங்கப்பட்டிருந்தும் காலதாமதமே ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், நுவரெலிய மாவட்ட ஆசிரிய உதவியாளர்கள் தங்களுக்கான நிரந்தர நியமனத்தையும் சம்பளத்தையும் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தொழிலாளர் தேசிய சங்கத்தின் அங்கத்தவர்கள் நேற்று காங்கிரஸுடன் கைக்கோர்த்தனர்



(தலவாக்கலை)

கொட்டகலை பிரதேச சபைக்குட்பட்ட பிட்டவின் தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர் தேசிய சங்கத்தின் அமைப்பாளர் கருப்பையா ராமலிங்கம் தனது ஆதரவாளர்கள் 25 பேருடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இணைந்துகொண்டார். இவர்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமானை நேற்று கொட்டகலை சி.எல்.எவ். காரியாலயத்தில் நேரில் சந்தித்து அவருடன் இணைந்துகொண்டனர்.

# தனிவீட்டுத்திட்டத்திற்கு அடித்தளமிட்டதே இ.தொ.கா. என்கிறார் சக்திவேல்

(தலவாக்கலை)

பெருந்தோட்டங்களில் தனிவீடுகளை அமைப்பதற்கு அடித்தளம் இட்டதே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பதை சகலரும் அறிவார்கள என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர்களில் ஒருவரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமாகிய பி.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

ஊடகச் சந்திப்பொன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

"நேற்று பெய்த மழையில் முளைத்த காளான் தன்னை ஆலவிருட்சம் என்று எண்ணிக்கொள்வது முட்டாள்தனமானது. பெருந்தோட்டங்களில் தனிவீடுகளை அமைப்பதற்கு ஆரம்பித்ததே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பதை சகலரும் அறிவார்கள். இன்று சிலர் பெருந்தோட்ட வீடமைப்புக்கு தாங்களே பிதாமகன் என்று காட்ட முற்படுகின்றனர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் திட்டம் ஒவ்வொரு தோட்டத்திலும் முழுமையான கிராமங்களை உருவாக்க வேண்டும் என்பதாகும்.



அந்த அடிப்படையிலேயே நாம் இந்திய அரசாங்கத்துடன் பேசி முதற்கட்டமாக 4,000 வீடுகளை பெற்றோம். ஆனால், நல்லாட்சி அரசாங்கத்தில் நடந்தது என்ன? அரசியல் தொழிற்சங்க இலாபங்களை முன்னிலைப்படுத்தி தோட்டத்திற்கு 25, 50 வீடுகள் என்ற அடிப்படையிலும், தொழிசங்க ரீதியாக தமது அங்கத்தவர்களை மையப்படுத்தியுமே வீடமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தோட்டங்களில் வீடுகளை பெற்றுக்கொள்வதற்கான அடிப்படை தகுதி குறிப்பிட்ட அமைச்சரின் தொழிற்சங்கத்தில் அங்கத்தவராக இருக்கவேண்டும் என்பதாகும். மேலும், அனைத்து வீடுகளும் தரமில்லாமல் கட்டப்பட்டன. சில கூரைகள் காற்றில் ஆடிபறந்தன. பல தோட்டங்களில் கட்டப்பட்ட வீடுகளைப் பொறுப்பேற்பதற்கு தொழிலாளர்களே மறுப்புத் தெரிவித்தனர். பல வீடமைப்புத் திட்டங்கள் அரையும், குறையுமாக கட்டப்பட்டன. இவர்கள் வீடமைப்புத் திட்டத்தில் பல சாதனைகளை செய்துவிட்டதாக விளம்பரங்களை செய்கின்றனர். விளம்பரத்துக்கப்பால் சென்று மக்களுக்கு சேவை மனப்பாங்குடன் செயற்படுவதே இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தனித்துவம். மக்களுக்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் களத்தில் நின்றுதான் சேவைசெய்யும். எனவே, இதனை மக்களும் நன்கறிவார்கள். இத்தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பலப்படுத்த மலையக மக்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு வாக்களிக்கத் தயாராக இருக்கின்றார்கள். நுவரெலியா மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வேட்பாளர்கள் வெற்றிபெறுவோம்" - என்றார்.

# வேட்டையாடப்பட்ட இறைச்சி மற்றும் கரடித் தலைகளுடன் நபரொருவர் கைது!

(நுவரெலியா)

மத்திய வனஜீவராசிகள் திணைக்களத்தின் ரிகில்லகஸ்கட பிரதேச அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது நபரொருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து கரடித் தலை இரண்டு மற்றும் வேட்டையாடப்பட்ட இறைச்சிகளும் தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரிலேயே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும், மான் இறைச்சி, முயல் இறைச்சி ஆகியவையும் அந்த நபர் தன்வசம் வைத்திருந்ததாக சந்தேகத்தின் பேரிலேயே அவர் கைதுசெய்யப்பட்டதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி தெரிவிக்கின்றார்.

இந்த அனைத்துப் பொருட்களும் விருந்தகம் ஒன்றிலிருந்தும் வீடொன்றிலிருந்தும் மறைத்து வைத்திருந்த நிலையிலேயே வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தங்களுடைய பொறுப்பில் எடுத்துள்ளனர். இது தொடர்பாக வனஜீவராசிகள் சட்டத்தின் பிரகாரம் குறித்த நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.





# இராணுவமயமாக்கலை தவிர்த்து ஜனநாயகத்துக்கு வழிவகுப்போம்

## -இராதாகிருஷ்ணன் கோரிக்கை

இராணுவமயமாக்கலை நோக்கி பயணிக்கும் இந்த அரசாங்கத்துக்கு எதிராகவும், ஜனநாயகத்துக்காகவும் சிறுபான்மையின மக்கள் ஒன்றுபட்டு வாக்களிக்கவேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:


"இந்த ஆட்சியானது இராணுவமயமாக்கலை நோக்கி பயணிக்கின்றது. அமைச்சின் செயலாளர் பதவிகளுக்குக்கூட இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அரச நிறுவனங்களின் பதவிகளும் இராணுவ அதிகாரிகளுக்கே வழங்கப்படுகின்றது. இவ்வாறு



இராணுவமயமாக்கலை நோக்கி பயணிக்கும் அரசாங்கத்துக்கு வாக்களிப்பதா அல்லது ஜனநாயகத்தின் பிரகாரம் செயற்படும் சஜித் பிரேமதாஸ தலைமையிலான கூட்டணிக்கு வாக்களிப்பதா என்பது தொடர்பில் நீங்கள் சிந்தித்து செயற்படவேண்டும். இது மிகவும் முக்கியமான தேர்தல். எமது இருப்பை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். சிறுபான்மையின மக்கள் ஒற்றுமையாக செயற்பட வேண்டும்" – என்றார்.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.


# வயதுக்கு வராதவர்களின் கட்சி சைக்கிள்; நக்குண்டு நாவிழந்தது வீடு: விக்கி சாடல்!



(யாழ்ப்பாணம்)

தம்பி பிரபாகரன் அன்று தொடங்கிய கூட்டமைப்புபோய் இன்று அது தமிழ் மக்கள் தேசிய கூட்டணியாக மாறியுள்ளதை நீங்கள் ஏற்று எமக்கு வாக்களிப்பீர்கள் என்று எண்ணுகின்றேன். தேர்தலில் களமிறங்கியுள்ள சுயேட்சைக் கட்சிகள் யாரோ சிலரின் அரசியல் சூழ்ச்சிகளின் பிரதிபலிப்பு. அவற்றையும் கூட்டமைப்பு உள்ளடங்கலாக அரசாங்கங்களுக்கு முண்டுகொடுக்கும் கட்சிகளையும் நீக்கினால் இரண்டே இரண்டு கட்சிகள்தான் மிஞ்சும். அவற்றில் ஒன்று எங்களுடையது. மற்றையது வயது வராத, முதிர்ச்சி பெறாத, வாதம் ஒன்றே வாழ்க்கை என்று வாதாடும் சைக்கிள் கட்சி - என தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் rசி.வி.விக்னேஸ்வரன்.

நேற்றுமுன்தினம் உடுவிலில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுகாறும் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்தவர்கள் எல்லாம் இப்பொழுது மீன் சின்னத்திற்கு மாறி வருகின்றார்கள். காரணம், வீட்டார் கொள்கை தவறிவிட்டார்கள். அவர்கள் மனதில் பொதுநல சிந்தனைகள் குறைந்து இப்பொழுது சுயநல சிந்தனைகளே மேலோங்கி நிற்கின்றன. நேரத்திற்கு நேரம் அவர்களின் பேச்சுகள் மாறிவருகின்றன. சந்தர்ப்பவாதிகளாக வீட்டார் இப்பொழுது வலம் வருகின்றார்கள்.

கூட்டமைப்பினதும் கூட்டணியினதும் அடிப்படை அரசியல் சிந்தனைகள் ஒரேவிதமாக இருப்பதாகத் தென்பட்டாலும் இதுவரையில் வீட்டார் அவை பற்றி நடந்துகொண்ட முறை எமக்கு ஏமாற்றத்தை அளிக்கின்றது. அவர்கள் தமது விஞ்ஞாபனங்களில் தமிழர் உரிமைகள் பற்றிப் பேசினாலும் அவர்களின் நடைமுறை நடத்தைகள் சலுகை அரசியலுக்கும் ஏமாற்றுகளுக்கும் விலை போவதாக அமைந்துள்ளன.

"நக்குண்டார் நாவிழந்தார்" என்ற பழமொழி கேட்டிருப்பீர்கள். இன்னொருவரிடம் பல்லிளித்து சலுகைகளைப் பெற்றுக்கொண்டால் எம்மால் அவர் செய்யும் வேறு பிழையான காரியங்கள் சம்பந்தமாக மாற்று நடவடிக்கைகள் எடுக்க முடியாமல் போய்விடும். நாவிழந்து விடுவோம்; மௌனிகளாகிவிடுவோம்.

சலுகைகள் தருபவர்கள் முட்டாள்கள் அல்ல. அவர்கள் திட்டமிட்டே உதவிகளை எங்களுக்குத் தருகின்றார்கள். உதாரணத்துக்கு ஒன்றைக் கூறுகின்றேன். இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்தபோது ஒரு நாடு அவர்களிடம் கடன் வேண்டுமா என்று கேட்டது. மிகக் குறைந்த வட்டியில் எவ்வளவு வேண்டுமானாலும் கடன் தருவோம் என்று அவர்கள் கூற, இலங்கை பாரிய கடன் வாங்கியது. அப்பணத்தில் பல மாடமாளிகைகளைக் கட்டினார்கள். கூட கோபுரங்களைக் கட்டினார்கள். ஏதோ தங்கள் பணத்தில் கட்டுவதுபோல் பொருளாதார விருத்தியை நாட்டுக்குக் கொண்டுவந்துள்ளதாக இலங்கை அரசாங்கம் அறிவித்தது. ஆனால், நடந்தது என்ன? கடனைத் திருப்பிக் கொடுக்கமுடியாத நிலை வந்ததும் நாட்டின் சில பகுதிகளை குறித்த வெளிநாட்டுக்கு இப்போது அடகுவைத்துள்ளார்கள். இந்த வெளிநாடு தென்கிழக்காசியா, ஆபிரிக்க நாடுகள் யாவற்றிலும் இவ்வாறுதான் நாடு பிடித்துவருகின்றது.

நாம் சலுகைகளைப் பெற விழையும்போது வருங்காலத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இல்லையேல் நாம் ஒருபொறிக்குள் அகப்பட்டுக்கொள்வோம். இப்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு பொறிக்குள் அகப்பட்டு தத்தளிக்கின்றது. பொறிக்குள் அகப்பட்ட அது மரண பயத்தில் இருந்துகொண்டுதான் இப்போது தேர்தலில் வாக்குகள் கேட்கின்றது.

அவர்களை இனியும் நீங்கள் மேலும் கஷ்டப்பட வைக்கவேண்டியதில்லை. வீட்டிலிருந்து மீனுக்கு மாறுங்கள் என்று கேட்கவே நாம் இங்கு வந்துள்ளோம். நாம் ஒன்றை மறக்கக்கூடாது. நாம் யாவருமே 2013 அளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களாக இருந்தோம். பின் என்ன நடந்தது?

எப்போது தனிமனிதர்கள் தங்கள் முடிவே மக்கள் முடிவு, கட்சியின் முடிவு என்று தம்பட்டம் அடிக்கத் தொடங்கினார்களோ, அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைநிலை சறுக்கத் தொடங்கிவிட்டது. 14ஆவது லூயி மன்னனிடம் அவனுடைய நாடு பற்றிக் கேட்டபோது அவன் விடையிறுத்தானாம் இவ்வாறு.

"நாடா? நாடு என்பது நானே!" என்று கூறினானாம். திமிரும் அகந்தையுந்தான் இவ்வாறு 14ஆவது லூயியைப் பேசவைத்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் அவ்வாறான சிந்தனைகள் கொண்ட சிலர் இருக்கின்றார்கள். தான்தோன்றித்தனமாக கொள்கைகளை மாற்றி இப்போது எமது கொள்கைகள் இதுதான் என்று ஒருதலைப்பட்சமாகக் கூறக்கூடியவர்கள் இவர்கள்.

கொள்கைகளை மாற்றலாம். ஆனால், அதற்கு முன்னர் மக்களிடம் அனுசரணை பெறவேண்டும். அவ்வாறு அனுசரணை பெறாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் எனப்படுபவர்கள் தன்னிச்சையாக வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளில் மண் அள்ளிப் போட்டதாலேயே இன்று அக்கட்சி ஆட்டம்கண்டுள்ளது. ஐந்து கட்சிகளுடன் வலம்வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது இரு கட்சிகளுடன் கூனிக்குறுகி வாக்குக் கேட்கின்றது. இக்கட்சியில் இப்போது தமிழரசுக் கட்சி, புளொட் மற்றும் ரெலோவில் அரைவாசியும் இருக்கின்றன.

எம்மைப் பற்றி "இக் கட்சி விரைவில் இருந்த இடம் தெரியாமல் போய்விடும்" என்று கூறிய சில அதிகம் படித்தவர்களின் கூற்றைப் பொய்யாக்கும் விதத்தில் எமது கட்சி தனிக்கட்சி என்ற ஸ்தானத்திலிருந்து ஐந்து கட்சிக் கூட்டணியாக மாறியுள்ளது. அதாவது, தற்போது கூட்டமைப்பு இரண்டரை கட்சிகள் என்றால் எமது கூட்டணி 5 கட்சிகள் கொண்டு வலம்வருகின்றது. நாம் இரட்டிப்பாக வளர்ந்துவிட்டோம். அவர்கள் அரைவாசியாய்த் தேய்ந்துவிட்டார்கள்.

தம்பி பிரபாகரன் அன்று தொடங்கிய கூட்டமைப்பு போய் இன்று அது கூட்டணியாக மாறியுள்ளதை நீங்கள் ஏற்று எமக்கு ஓகஸ்ட் 5ஆம் திகதி தவறாது வாக்களிப்பீர்கள் என்று எண்ணுகின்றேன். வாக்களிப்பது எப்படி என்றும் கூறிவிடுகின்றேன். இம்முறை வாக்குப் பதிவுச்சீட்டு மிக நீளமானது. 33 கட்சிகளின் பெயர்கள் அதில் அடங்குகின்றன. அவற்றுள் 14 சுயேட்சைக் கட்சிகள். இந்த சுயேட்சைக் கட்சிகள் யாரோ சிலரின் அரசியல் சூழ்ச்சிகளின் பிரதிபலிப்பு. அவற்றையும் கூட்டமைப்பு உள்ளடங்கலாக அரசாங்கங்களுக்கு முண்டுகொடுக்கும் கட்சிகளையும் நீக்கினால் இரண்டே இரண்டு கட்சிகள்தான் மிஞ்சும். அவற்றில் ஒன்று எங்களுடையது. மற்றையது வயது வராத, முதிர்ச்சி பெறாத, வாதம் ஒன்றே வாழ்க்கை என்று வாதாடும் சைக்கிள் கட்சி. அதற்குக் காலம் இருக்கின்றது. அதைத் தவிர்த்து அந்த வாக்குச்சீட்டில் மீன் சின்னத்தைத் தேர்ந்தெடுங்கள். சுமார் பத்தாவதாக மீன் சின்னம் இருக்கும். அதற்கு எதிராக ஒரு புள்ளடி போடுங்கள்.

இப்பொழுது தேசியக் கூட்டணிக்கு வாக்களித்துவிட்டீர்கள். அடுத்து அந்த வாக்குச்சீட்டின் அடியில் இருக்கும் 1-10 வரையிலான இலக்கங்களுக்கு வாருங்கள். நாம் உங்களுக்குக் கைப் பிரசுரங்கள் தந்துள்ளோம். அவற்றில் எமது 10 வேட்பாளர்களின் படங்கள், பெயர்கள், இலக்கங்கள் யாவும் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மூன்று பேர்களைத் தேர்ந்தெடுத்து அந்த இலக்கங்களின் மேல் புள்ளடி போடுங்கள். எனக்கு வாக்களிக்க விரும்பினால் இலக்கம் 6இன் மேல் புள்ளடி இடுங்கள் - என்றார்.

## பகிரங்க விவாதத்திற்கு வர எதிரணிகளுக்குப் பயம்:

# முதுகுக்குப் பின்னால் நின்று விமர்சனம் வேண்டாம் என்கிறார் சுமந்திரன்!



"எங்களுடைய முதுகுக்குப் பின்னால் நின்றுகொண்டு பொய்யான பிரசாரங்களையும் குழப்புகிற வேலையை மட்டும்தான் விக்னேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார் போன்றவர்கள் மேற்கொள்கிறார்கள். பொதுவெளியில் வந்து பேச இவர்களுக்குப் பயம். முடிந்தால் வந்து பேசலாம் என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன்.

கிளிநொச்சி தர்மபுரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடக நிறுவனமொன்று விவாத நிகழ்ச்சியொன்றை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தவிருந்தது. அந்த நிகழ்வு குறித்து அதன் ஏற்பாட்டாளர்கள் ஆரம்பத்தில் எங்களுடன் பேசியிருந்தார்கள். அதாவது, உங்களுடைய கட்சியிலிருந்து இரண்டு பேரும் அதேபோல விக்னேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமாரின் கட்சியிலிருந்து இரண்டு பேரையும் எனக் கேட்டிருந்தார்கள். அதற்கு மற்ற கட்சித் தலைவர்கள் வருவார்களாக இருந்தால் நானும் வருவேன் என்று நான் கூறியிருந்தேன்.

ஆயினும், பலரும் வராததாலும் ஒதுங்கியதாலும் அந்த விவாத நிகழ்வு இரத்துச் செய்யப்பட்டிருக்கின்றது. அதற்கான காரணம் என்னவெனில், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன், தமது கட்சியின் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் அருந்தவபாலன் ஆகியோரை இதில் பங்குபற்றும்படியாக நியமித்திருந்தாராம். ஆனாலும் அவர்களும் நிகழ்விற்கு வராமல் கடைசிநேரத்தில் பின்னடித்துவிட்டார்கள்.

அதேநேரம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த விவாத நிகழ்வுக்கு சுமந்திரன் வந்தால் தான் வருவதாக திரும்பத்திரும்ப நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களிடம் கூறியிருக்கின்றாராம். அதேபோல நானும் கஜேந்திரகுமார் வந்தால் வருவதாக கூறியிருந்தேன். ஆனால், கடைசி நேரத்தில் கஜேந்திரகுமாரும் இந்த விவாத நிகழ்விற்கு வரவில்லை என அறிவித்திருக்கின்றார். அதேநேரம், தனக்குப் பதிலாக தன்னுடைய கட்சியின் சார்பில் காண்டிபன் என்கின்ற ஒருவரையும் சுகாஷ் என்கின்ற ஒருவரையும் செல்லுமாறு பணித்திருக்கிறார்.

இந்த விடயத்தை நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் நேற்றிரவு என்னிடத்தே சொன்னபோது நானும் அந்த நிகழ்வுக்குச் செல்லாமல் எங்களுடைய கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை குறித்த நிகழ்வுக்குச் செல்லும்படியாக நான் நியமித்திருந்தேன். இவ்வாறான நிலைமைகளின் மத்தியில் தற்போது அந்த நிகழ்ச்சியையே ஏற்பாட்டாளர்கள் இரத்துச்செய்துள்ளனர்.

ஆக! ஒரு பொது மேடையில் வந்து பேசுவதற்கு தலைவர்களுக்கு வக்கில்லை. முடிந்தால் வந்து பொதுவெளியில் பேசலாம். இதனைவிடுத்து எங்களுடைய முதுகுக்குப் பின்னால் நின்றுகொண்டு பொய்யான பிரசாரங்களையும் குழப்புகிற வேலையை மட்டும் செய்துகொண்டு அவர்கள் ஒரு பக்கத்தில் பயணிக்கிறார்கள்.

மறுபக்கத்தில் அவர்களும் தங்களை தீவிர தமிழ்த் தேசியவாதிகளைப்போல காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், செய்யிறது முழுக்க குழப்பவேலை. மறுபக்கத்தில் அரசாங்கத்தோடு ஒட்டிக்கொண்டிருந்து முற்றுமுழுதாக எங்களுடைய இருப்பை நாசமாக்கிற எல்லா வேலையையும் செய்துகொண்டு கூட்டத்தில் பாடுவது தமிழீழ எழுச்சிப் பாடல்தான். அங்கஜன் இராமநாதனின் கூட்டத்தில் இந்த எழுச்சிப்பாடல்தான் போடப்படுகிறது.

மேலும், இங்கு கிளிநொச்சியிலும் ஒருவர் இருக்கிறார். இப்போது சுயேட்சையாகக் கேட்கிறாராம். என்ன சுயேட்சை. அவர் எங்கே இருந்தவர், என்ன செய்தவர். எப்படியாக எங்களுடைய தேசிய சிந்தனையை சிதைப்பதற்காக ஒரு ஒட்டுண்ணியாக இருந்தவர் என்பது எல்லாருக்கும் தெரியும்தானே.

டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக எத்தனை காலம் இருந்திருப்பார். ஆனால், அவர் எனக்கு அரசியல் பலம் போதாது என்றும் இருந்தால் நான் செய்திருப்பேன் என்றும் சொல்கிறார். அப்படியானால் போதாத பலத்தை வைத்துக்கொண்டு என்னத்தைச் செய்தார் என்பதும் எங்களுக்குத் தெரியும். கொள்ளையடித்தார். காணாமலாக்கப்பட்டவர்களுக்கான ஜனாதிபதி ஆணைக்குழு யாழ்ப்பாணத்தில் சென்று சாட்சிகளைப் பெற்றபோது சாட்சியளித்த பெற்றோர்கள் ஈ.பி.டி.பி.தான் எங்களுடைய பிள்ளைகளை கடத்திக்கொண்டுபோனது என்று கூறியவை எல்லாம் மறுநாள் பத்திரிகைகளிலும் வந்துள்ளது. அந்த விடயங்கள் அந்தக் குழுவின் அறிக்கையிலும் முழுமையாக இருக்கிறது.

இவர்கள் எல்லாம்தான் வந்து இன்றைக்கு எங்கள் மக்களிடத்தே வாக்கு கேட்கின்றார்கள். இரண்டு அணிகள் ஒரு அந்தத்திலும் மற்ற அணிகள் வேறு அந்தத்திலும் இருப்பதாகக் காட்டிக்கொண்டு இரண்டு பேருமே முற்றுமுழுதாக எங்களுடைய பயணத்தை சிதைக்கிற வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எங்களுடைய பயணத்திற்கு இதுவரை வழங்கிவந்த ஆதரவை தொடர்ந்தும் மக்கள் வழங்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

## ஆடி அமாவாசை பிதிர்க்கடன் மாயவனாறு தீர்த்தக்கரையில் நிறைவேற்றம்





**இந்துக்களின் முக்கிய விரதங்களிலொன்றான ஆடி அமாவாசை விரதம் நேற்று திங்கட்கிழமை சிலாபம் மாயவனாறு தீர்த்தக்கரையில் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டபோது. (படங்கள்:- உடப்பு நிருபர்)**

## கதிர்காமம் கிரிவெஹெர ரஜமஹா விகாரையில் பிரதமர் வழிபாடு





பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முற்பகல் கதிர்காமம் கிரிவெஹெர ரஜமஹா விகாரையில் தாதுகோபுர வழிபாட்டில் ஈடுபட்டு ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.

பிரதமருக்காக கிரிவெஹெர ரஜமஹா விகாரையில் தாதுகோபுரத்தின் முன்னால் பிரித் பாராயணம் செய்யப்பட்டதுடன், அதன் பின்னர் ருஹுணு மாகம்பத்துவையின் தலைமை சங்கநாயக்கர், சங்கைக்குரிய கொபவக தம்மிந்த தேரரை சந்தித்து பிரதமர் ஆசி பெற்றார்.

கிரிவெகர ரஜமஹா விகாரையில் வழிபாட்டை நிறைவுசெய்த பின்னர் ருஹுணு கதிர்காம தேவாலயத்தில் இடம்பெற்ற ஆசீர்வாத பூஜையொன்றிலும் பிரதமர் கலந்துகொண்டார்.

# உத்தேச அபிவிருத்தித் திட்டத்தில் இரத்தினபுரி நகருக்கு புதிய தோற்றம்

## -ஜனாதிபதி தெரிவிப்பு



முன்மொழியப்பட்டுள்ள இரத்தினபுரி நகர அபிவிருத்தித் திட்டத்தின்மூலம் நகருக்கு ஒரு புதுத் தோற்றம் கிடைக்குமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜன முன்னணியில் இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வெற்றியை உறுதிசெய்யும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இரத்தினபுரி மாவட்டத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டு, நேற்று முன்தினம் பிற்பகல் இரத்தினபுரி சீவலி விளையாட்டரங்கிற்கு அருகில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பின்போதே இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன மற்றும் ரஞ்சித் பண்டார ஆகியோர் இதனை ஏற்பாடுசெய்திருந்தனர். கொழும்பு - இரத்தினபுரியை இணைக்கும் அதிவேகப் பாதை நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிளிமலே வைத்தியசாலையை புனர்நிர்மாணம் செய்து தருமாறு மக்கள் முன்வைத்த கோரிக்கை அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

பிரேமலால் ஜயசேகர நிவித்திகல பஸ் நிலையத்திற்கு முன்னால் ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பிலும் ஜனாதிபதி பங்குபற்றினார். அவிசாவளையிலிருந்து ஓப்பநாயக்க வரையிலான புகையிரத பாதைக்குச் சொந்தமான காணிகளில் வதியும் சுமார் 35,000 பேருக்கு சட்ட ரீதியான உறுதிகள் இல்லாமை பற்றியும் ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கும் பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்களுக்கும் கடுமையான தண்டனைகளை வழங்குமாறு கோரிய மக்கள், பாதுகாப்பான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி முன்னெடுத்துவரும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக தெரிவித்தனர்.

அமைச்சர் பவித்ரா வன்னயாராச்சி மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் எஹெலியகொட பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு அருகிலும் ஜனக்க வக்கும்புர கலவான அயகம சந்தைக்கு முன்னாலும் ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்புகளிலும் பங்குபற்றிய ஜனாதிபதி, வருகை தந்திருந்த மக்களுடன் சுமுகமாக கலந்துரையாடினார்.

# அம்பாறை மாவட்டத்தை முஸ்லிம்களிடமிருந்து பிரிக்கும் வேலையை அதாவுல்லாஹ் செய்கின்றார்

## -முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தவிசாளர் சேகு இஸ்ஸடீன்

தேர்தல் முடிந்தவுடன் கல்முனைக்கு படையெடுக்கவுள்ளதாக ஞானசார தேரர் குறிப்பிட்ட கருத்து கண்டனத்திற்குரியது. இந்தத் தேரர் தமிழர்களின் வாக்குகளைப் பிரிக்க தெரிந்தெடுத்த பேர்வழி. அவருக்கு கருணா பக்கபலமாக இருக்கின்றார் - என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தவிசாளர் சேகு இஸ்ஸடீன் தெரிவித்தார்.



அம்பாறை மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எச்.எம்.எம்.ஹரீஸை ஆதரித்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஒழுங்குசெய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய காங்கிரஸில் தலைவர் அதாவுல்லா மூன்று ஆசனத்தைக் கேட்க இரண்டுதான் வழங்கப்படும் என்றபோது மூன்றில் தற்செயலாக ஒரு பிரதிநிதியை அவர் பெற்றால் முஸ்லிம் பிரதிநிதித்துவம் பெற சாதகமாக அமையும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொண்டார்கள்.

இதனால்தான் அம்பாறை மாவட்டத்தை மொட்டு கட்சியின் ஆளுமையின் கீழ் பெரும்பான்மை சிங்கள ஆதிக்கத்தை காட்டிக்கொள்ள அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள். ஆயினும், அம்பாறை மாவட்டத்தில் அதிக ஆதரவு முஸ்லிம் காங்கிரஸுக்கு இருக்கிறது என்பதையும் மக்கள் அக்கட்சிக்கு மேலதிக ஆசனங்களைப் பெற ஆதரவை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

இதற்கு சமாந்தரமாக வாக்குகளை கேட்கின்ற அதாவுல்லாஹ் முஸ்லிம் காங்கிரஸோடும் இல்லை, முஸ்லிம் மக்களோடும் இல்லை என்பதை மக்கள் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். அவர் தேசிய காங்கிரஸில் கேட்பதால் 25 ஆயிரம் வாக்குகளைப் பெற்று மொட்டு கட்சிக்கு பலம் சேர்க்கிறார். அதன்மூலம் அவர் அம்பாறை மாவட்டத்தை முஸ்லிம்களிடமிருந்து பிரிக்கும் வேலையை செய்கின்றார்.

தற்போது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட வடக்கு, கிழக்கு மாகாணத்தை இணைக்க கேட்கிறது. ஆனால், கிழக்கை மையப்படுத்தி நிலங்களை கையகப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசு திட்டமிட்டுள்ளது. இன்னும் சிறிதுகாலத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் சிங்களவர்களின் கைகளுக்கு மாறும் நிலை தோன்றியுள்ளது.

அத்துடன், குதிரையை காட்டி நீலமலை திருடன்போல் வாக்கு கேட்டு வருகின்ற அதாவுல்லாஹ் இந்தத் தேர்தலில் தோல்வி யடைவார். அவர் அம்பாறை மாவட்ட முஸ்லிம்களை மொட்டுக்கு அடிமைகளாக்க பாடுபடுகின்றார். - என்றார்.

# எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ளும் தலைமையாக தேசிய காங்கிரஸ் தலைமை அமைந்துள்ளது

## அக்கட்ச்சியின் திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர் சலீம்

முஸ்ஸிம் கட்சிகளில் சிறந்த தலைமைத் துவமாகவும் நாட்டின் எல்லா இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான கட்சியாக தேசிய காங்கிரஸ் கட்சி இருக்கின்றது, எமது பிரதேசத்திலுள்ள சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணக்கூடிய தலைவர் என்ற ரீதியில் தேசிய காங்கிரஸ் தலைமையின் கொள்கை களை நாங்களும் எமது மக்களும் ஏற்றுக் கொண்டுள்ளோம். எனவேதான் இம்





முறை தேர்தலில் அக்கட்சியில் போட்டி யிடுகிறோம் என்று தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளரும், சட்டம், ஒழுங்கு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளருமான ஏ.எல்.எம்.சலீம் தெரிவித்தார்.

சாய்ந்தமருது கடற்கரை வீதி, பௌசி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்று கையில்,

முஸ்லிம்களின் கட்சிகள் என்று சொல்லப் படுகின்ற இரண்டு கட்சிகளின் தலை மைத்துவமும் ஒழிக்கப்பட்டு தேசிய காங்கிரஸ் தலைமைத்துவம் உருவாக்கப்பட வேண்டும். அந்தத் தலைவர்களை மக்கள் தோற்கடிக்கும் காலம் வெகுதூரமில்லை என்பதை இந்தத் தேர்தல் எடுத்துக்காட்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அம்பாறை மாவட்ட மக்கள் புத்தி சாதூரியமானவர்கள், சிறந்த தலைமைத்து வத்தை ஏற்படுத்த திடசங்கற்பம் பூண்டுள் ளனர். குறிப்பாக, இம்மாவட்ட மக்களுக்கு முக்கியமான பங்கு உள்ளது. ஏனென்றால், இம்மாவட்டதிற்கென்று தலைமைத்துவம் உள்ளது. இதுதான் தேசியத்துக்கும் ஒரு தலைமைத்துவமாக மாறப்போகின்றது.

எதிர்காலத்தில் எமது சுபீட்சம் மற்றும் எமது எதிர்கால சந்ததிக்கு சிறந்த விடயங் களை நாம் விட்டுச்செல்ல வேண்டும். அதற்காக நமது மக்கள் தேசிய காங்கிரஸுக்கு வாக்களிக்க வேண்டும் - என்றார்.




# தாந்தாமலை ஸ்ரீமுருகன் ஆலய உற்சவ காலத்தில் பக்தர்கள் ஆலயம் வரவேண்டாம்

## ஆலய பரிபாலன சபைத் தலைவர் வேண்டுகோள்

மட்டக்களப்பு தாந்தாமலை ஸ்ரீமுருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 14ஆம் திகதி தொடக்கம் கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. எனவே, நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக ஆலயத்தில் மக்கள் ஒன்றுகூட முடியாத நிலையால் பக்த அடியார்கள் ஆலயத்துக்கு வருவதை தவிர்த்து வீட்டி லிருந்து தரிசிக்குமாறு ஆலய பரிபாலனசபைத் தலைவர் அருணன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்லடியிலுள்ள வொய்ஸ் ஓவ் மீடியா கற்கை நிலையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு வேண்டுகொள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆலய உற்சவம் கடந்த 14ஆம் திகதி கொடியேற்றம் ஆரம்பித்து எதிர்வரும் ஓகஸ்ட் 4 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறவுள்ளது. இந்த நிலையில், நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்று நோய் காரணமாக ஆலயத்தில் பக்த அடி யார்கள் ஒன்றுகூடமுடியாத நிலை காரண மாக சுகாதாரப் பிரிவினரது அறிவுறுத்தல் களுக்கமைய 50 பேர் மாத்திரம் முருகப் பெருமானுக்கு பூஜை செய்ய அனுமதி கிடைத்திருக்கின்றது.

எனவே, இந்த அசாதாரண நிலைமையைக் கருத்திற்கொண்டு அடியார்களுக்கான அடிப்படை வசதிகள் எதுவும் செய்யப் படவில்லை. குறிப்பாக, போக்கு வரத்து வசதி, குடிநீர் வசதி, மலசலகூட வசதி, அன்னதான வசதி எதுவும் செய்யப்பட வில்லை. ஆகவே, பக்த அடியார்கள் அதனை கருத்திற்கொண்டு இந்த வருடம் முருகப்பெருமான தரிசிக்க வருகை தராமலிருப்பது நல்லது என்பதுடன் ஸ்ரீ முருகப்பெருமானுடைய அடியார்கள் தங்களது வீட்டிலேயே இருந்து முருகனைத் தரிசிக்குமாறு பரிபாலன சபையின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

தா என்று இரப்போருக்கு இந்தா என்று அருள்பவர் தாந்தாமலை ஸ்ரீமுருகன். அத்தகைய பலரை வளர வைத்த அத்திருத் தலத்தில் அதற்கு மாறான ஒரு பழி ஏற்பட் டது என்ற பழி ஏற்படாதிருப்பதற்காக அடி யார்கள் வருகை தருவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு வினயமாக வேண்டுகின்றோம். அடியார்களின் நலன்களைக் கருத்திற்கொண்டும் சட்ட நியமங்களுக்கு மதிப்பளித்தும் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கின்றோம்.

எமது சமய, பண்பாடு, வழக்காற்று விடயங்களில் ஏற்பட்டிருக்கின்ற இந்த மாறுபட்ட நடைமுறைகளுக்காக வருந்து



கிறோம். இருப்பினும், சட்டத்தைப் பின்பற்றுமாறு அனைத்து அடியார்களையும் வேண்டுகின்றோம்.

கடந்த காலங்களில் இலட்சக்கணக்கான மக்கள் ஆலயத்திற்கு வருகை தந்து எம்பெருமானுடைய இஷ்ட சித்திகளைப் பெற்றுச்செல்வது வழமை. ஆனால், இந்த வருடம் வீடுகளிலேயே தனித் திருந்து எம்பெருமானுடைய இஷ்ட சித்தி களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். ஏனென்றால், எங்களையும் பாதுகாத்து ஏனையோரையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரிடமும் இருக்கின்றது - என்றார்.

# பழையதையே பேசிக்கொண்டிருந்தால் வாழ்வது எப்போது என்பதான கேள்வி எழும்

## தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம்.அதாஉல்லாஹ்


(அக்கரைப்பற்று)

நாம் பிரதேசவாதங்களுக்கப்பால், இனவாதங்களுக்கப்பால் நமது மக்களை வாழவைக்க வேண்டும். தமிழர்களோ, முஸ்லிம்களோ, சிங்களவர்களோ யாராக இருந்தாலும் நம் முன்னோர்கள் வாழ்ந்த இந்த மண்ணிலே வாழவேண்டும் - என தேசிய காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா தெரிவித்தார்.

தேசிய காங்கிரஸில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்படி கூறினார்.

தேசிய காங்கிரஸில் போட்டியிடும் வேட் பாளர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

இன்னும் கத்திக்குத்து, துப்பாக்கி வேட்டு, இரத்த ஆறு, முஸ்லிம், தமிழ், சிங்களம் என்று பேசிக்கொண்டிருந்தால் வாழ்வது



எப்போது என்பதான இந்த 30, 40 வருட அனுபவங்கள் நமக்கு சொல்லித் தந்திருக்கின்றன. தலைவர் மரணித்து 20 ஆண்டுகளில் நாங்கள் நிறைய பாடங்களை கற்றிருக்கிறோம். அப்படித்தான் நமது அட்டாளைச்சேனை உடன்பிறப்புகளும் சேர்ந்திருக்கிறார்கள். அட்டாளைச்சேனை மக்கள் ஏனைய வேட்பாளர்களுக்கு வாக்கு போடுவதில்லை என்று அவர்களுடைய தலையிலும் கைகளிலும் சத்தியம் செய்திருக்கிறார்கள். அதேபோன்றுதான் சம்மாந்துறையிலும் வீ.சி.இஸ்மாயிலின் தலைமையில் ஒற்றுமைப்பட்டிருக்கிறார்கள். எல்லாப் பிரதேசங்களிலும் மக்கள் தேசிய காங்கிரஸின் பக்கம் வந்து கொண்டிருக்கிறார்கள்.

நாம் 3 ஆசனங்களுக்கு மேல் பெற வேண்டும், அதற்காக நீங்கள் எல்லோரும் ஒன்றிணைய வேண்டும் - என்றார்.

# கிழக்கில் தபால் மூலம் வாக்களிக்கத் தவறியோர் ஞாயிறன்று வாக்களித்தனர்

(மட்டக்களப்பு)

ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடை பெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பின்போது வாக்களிக்கத் தவறியவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஞாயிறன்று மிகவும் ஆர்வத்துடன் தமது வாக்குகளைப் பதிவுசெய்தனர்.

தேர்தல் திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தில் இவ்வாக்களிப்பு இடம்பெற்றது.

காலை 8 மணிக்கு ஆரம்பமான வாக்களிப்பில் அரச உத்தியோகத்தர்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

இம்மாவட்த்தில் இம்முறை தபால் மூலம் வாக்களிக்க 12,815பேர் தகுதி பெற்றிருந்தாக தேர்தல் திணைக்கள



அதிகாரிகள் தெரிவித்தனர். இவ்வாக்களிப்பை முன்னிட்டு மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாக்களிப்பு நிலையத்தில் வாக்காளர் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் தீவிரம்

## தேர்தல்கள் உதவி ஆணையாளர் ரீ. ஹென்ஸ்மேன்

தேசிய சமாதானப் பேரவையின் மட்டக் களப்பு மாவட்ட சர்வமத செயற்குழு அமர்வு நேற்று மட்டக்களப்பு ஆனந்தசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சர்வமத செயற் குழுவின் இணைப்பாளர் ஆர்.மனோகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களைச் சேர்ந்த சமாதான செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான முன்னெடுப்புகள் பற்றிய தெளிவுரையை அவர் சமாதான செயற்பாட் டாளர்களுக்கு வழங்கினார். அதுபற்றி அங்கு மேலும் குறிப்பிட்ட ஹென்ஸ்மேன்,

"மட்டக்களப்பு மாவட்டத்தில் 16 கட்சிகளும் 22 சுயேச்சைக் குழுக்களு மாகச் சேர்த்து 38 அணிகளைக்கொண்ட இரு நிரல் வாக்குச்சீட்டு வருகிறது. கட்சிக்கோ அல்லது சுயேச்சைக் குழுவுக்கோ புள்ளடி இடுவதுடன் வேட்பாளர்களில் 3 பேருக்கு வாக்களிக்க முடியும். வழமை போன்று கட்சிக்கோ அல்லது சுயேட்ச் சைக் குழுவுக்கோ மாத்திரமும் வாக்களிக் கவும் முடியும். புள்ளடி தெளிவாக இருக்கு மென்பதால் புள்ளடியைத்தான் விரும்புகின் றோம். வாக்காளர்கள் நீலம் அல்லது கறுப்பு குமிழ்முனைப் பேனா தம்வசம் எடுத்து வரவேண்டும். கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக பேனாக்கள் வாக்களிப்பு நிலையத்தில் வழங்கப்படமாட்டாது.

இம்முறை கொரோனா முற்பாதுகாப்பு தடுப்பு முன்னெச்சரிக்கை இருப்பதால் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் தேர்தல் அலுவலர் வாக்காளரின் ஆளடையாள அட்டையை தனது கையால் எடுத்து பார்த்து உறுதிப்படுத்த மாட்டார், மாறாக, வாக்காளர் தனது அடையாளத்தை உறுதிப்படுத்தும் விதமாக தேர்தல் அலுவலர் தெளிவாக பார்க்கக்கூடியவாறு தனது ஆள் அடையாள அட்டையை மிகக் கிட்டிய தூரத்தில் வைத்துக் காண்பிக்க வேண்டும்" - என்றார்.







உலகின் முதல் தமிழ் போராசியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் 73ஆவது சிரார்த்த தினமும் கல்லடி சிவானந்தா தேசிய பாடசாலையின் 73 ஆவது ஸ்தாபகர் தினமும் கடந்த ஞாயிறன்று உணர்வுபூர்வமாக சுவாமி விபுலானந்தர் மணிமண்டப வளாகத்தில் அமைந்துள்ள சுவாமியின் சமாதியில் நடைபெற்றது. மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி நீலமாத மானந்தாஜீ தலைமையில் நடைபெற்ற இவ் வழிபாட்டு நிகழ்வுகளில் சுவாமி விபுலானந்தா மணிவிழா சபைத் தலைவர் கே.பாஸ்கரன், கல்லடி சிவானந்தா தேசிய பாடசாலை அதிபர் ரீ.யசோதரன் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். (மட்டக்களப்பு)

# முகக்கவசம் தொடர்பான பொலிஸ் திணைக்களத்தின் விழிப்பூட்டல் மட்டுநகரில்




நாடளாவிய ரீதியில் கொரோனா அச்சம் முற்றுமுழுதாக நீங்காத நிலையில் மக்களை தெளிவூட்டும் செயற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

பொலிஸ் திணைக்களத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தினால் மக்களுக்கு முகக்கவசம் அணிவது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை கடந்த ஞாயிறன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.கே.ஹெட்டியாராச்சியின் தலைமையில் கிழக்கிலங்கை தன்னம்பிக்கை சமூக எழுச்சி நிறுவனமும் இணைந்து முகக்கவசம் குறித்து விழிப்புணர்வுப் பணிகளை முன்னெடுத்ததுடன், முகக்கவசம் அணியாதவர்களுக்கு இலவசமாக முகக்கவசங்களும் வழங்கப்பட்டன.

# கொரியர் சேவையூடாக போதைப்பொருள் கடத்தியோரைத் தேடி பொலிஸார் வலைவீச்சு



கொரியர் சேவை ஊடாக போதைப் பொருட்களை கடித உறையில் வைத்து கடத்தியவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களை கைதுசெய்வதற்காக தேடுதல் நடவடிக்கையொன்றை முன்னெடுக்கவுள்ளதாக அம்பாறை மாவட்ட மதுவரி அத்தியட்சகர் என்.சுசாதரன் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை தனியார் கொரியர் சேவை ஊடாக ஹெரோயின் போதைப்பொருள் கடித உறைகளில் கடத்தப்பட்டு வருவதாக கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய அம்பாறை புறநகர்ப் பகுதியொன்றில் மதுவரி அத்தியட்சகர் மற்றும் அம்பாறை மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.தங்கராஜா தலைமையிலான குழுவினர் இணைந்து 4 சந்தேக நபர்களை போதைப்பொருளுடன் கைது செய்திருந்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நால்வர் உட்பட தம் வசம் கஞ்சாவை வைத்திருந்ததாக கூறப் பட்ட மற்றுமொரு 43 வயது மதிக்கத்தக்க சந்தேகநபரையும் கடந்த புதன்கிழமை அம்பாறை நீதிமன்ற நீதிவான் ஹன்சதேவ சாமர திவாகர முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து எதிர்வரும் ஜூலை மாதம் 29ஆம் திகதி வரை அனைத்து சந்தேகநபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு அவர் உத்தரவிட்டிருந்தார்.

இதற்கமைய அம்பாறை மாவட்டத்தின் மதுவரி அத்தியட்சகர் தலைமையில் கைதானவர்களின் வலைப்பின்னல் தொடர்பிலான புலனாய்வு முடக்கிவிடப்பட்டிருந்தது.

இதற்கமைய தனியார் கொரியர் சேவை ஊடாக மேற்கொள்ளப் பட்டிருந்த இந்த நூதனமான கடத்தல் நடவடிக்கையுடன் தொடர்புடையதாக நம்பப்படும் அந்நிறுவனத்தின் அம்பாறை கிளையின் சந்தேக நபரான அதன் முகாமையாளர் மற்றும் விநியோக வேலையாட்கள் இருவர் கைதாகியிருந்தனர். அத்துடன், இவர்களின் வாக்குமூலத்துக்கமைய இச்சேவையின் கொழும்பு பிரதான நிலைய அதிகாரிகள் சிலரையும் எதிர்வரும் நாட்களில் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், குறித்த தனியார் கொரியர் சேவை ஊடாக கடத்தப்படும் போதைப்பொருட்களை பொறுப்பேற்க வந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலும் இருவர் கைதாகியுள்ளனர். இதனுடன் தொடர்புபட்ட சிலரையும் நீதிமன்ற உதவியுடன் பிடியாணை மூலம் கைதுசெய்ய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம் - என்றார்.

# திருக்கோவில் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் நேற்று நடைபெற்றது



(காரைதீவு)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற திருக் கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் நேற்று சுகாதார நடைமுறை விதிகளைப் பின்பற்றி வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள், ஆலயகுரு சிவஸ்ரீ நீதி. இராசையாக்குருக்கள் முன்னிலையில் தீர்த்தோற்சவத்துக்கான கிரியைகள் நடைபெற்று வங்கக்கடலில் நண்பகல் 12 மணியளவில் தீர்த்தமாடப்பட்டது. வழமையைவிட குறைவான அளவு பக்தர்களே தீர்த்தமாடினர்.

அன்னதானம் ஆலயத்தினுள் இடம் பெறவில்லை. எனினும், சுமார் ஆயிரம் பக்தர்கள் கலந்துகொண்டார்கள்.

மரணித்த தந்தைக்கு பிதிர்க்கடன் செய்வது ஆடி அமாவாசையின் சிறப்பாகும். இம்முறை ஆடி அமாவாசை உற்சவம் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமாகியது. நேற்று 20ஆம் திகதி திங்கட்கிழமை இவ்வுற்சவம் தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைந்தது.

# அறநெறி ஆசிரியர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிநெறி காரைதீவில் இடம்பெற்றது






இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் காரைதீவு பிரதேச எல்லைக்குட்பட்ட இந்துசமயத் தலைவர்கள் மற்றும் அறநெறி ஆசிரியர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறி காரைதீவு பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வளவாளராக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், அம்பாறை மாவட்ட செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கே.ஜெயராஜி, என்.பிரதாப், காரைதீவு பிரதேச இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர், காரைதீவு பிரதேச எல்லைக்குட்பட்ட இந்து ஆலயங்களின் அறங்காவலர்களும், இந்து சமய அறநெறி பொறுப்பாசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.




# மட்டக்களப்பை அபிவிருத்திசெய்ய முறையான திட்டம் என்னிடம் உள்ளது

## த.தே.கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் சாணக்கியன்




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினூடாக உரிமையும் அபிவிருத்தியும் எனும் சிந்தனையுடாக நானும் செயற்படுவேன். அதற்குரிய திட்டமிடல்கள், எதிர்கால மட்டக்களப்பு 2030 எனும் அமைப்பை உருவாக்கி தூரநோக்கு சிந்தனையை வைத்துள்ளேன். அதனை அமுல்படுத்துவதற்குரிய அதிகாரம்தான் எனக்குத் தேவைப் படுகின்றது - என்று தமிழ் தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நேற்று எருவில் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இம்முறையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 ஆசனங்கள் உறுத்திப்படக் கிடைக்கும், நான்காவது ஆசனத்தைப் பெறுவதற்கு நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து வேலை செய்கிறோம். இது இவ்வாறிருக்க ஏனைய கட்சிகளின் சார்பில் எமது பட்டிருப்பு பிரதேசத்தில் மாத்திரம் 17 வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆளுக்கு ஆயிரம் வாக்குகளைப் பெற்று மொத்தம் 17,000 வாக்குகளைப் பெற்றாலும் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெறும் நான்காவது ஆசனத்தை அது பாதிக்கும். எனவே, எமது மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாத்திரம் வாக்களித்தால் இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 ஆசனங்களைப் பெறும். குறிப்பிட்டளவு நிதியைக் கொடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகளைப் பிரிப்பதற்காகத்தான் எமக்கு எதிராக பலர் களமிறக்கப்பட்டுள்ளார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர வேறு எவருக்கும் 40 ஆயிரம் வாக்குகளை இந்த மாவட்டத்தில் பெறமுடியாது.

தற்போது இளைஞர்கள் எல்லோரும் என்னுடன் இணைந்து வந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் செயற்படுகின்றார்கள். இந்நிலையிலும் என்னைப் பற்றி பொய்யான விடயங்களையும் சிலர் முகநூல்வாயிலாக தெரிவிக்கின்றார்கள். என்னைப்பற்றி பொய்யான தகவல்களைத் தெரிவித்தால் அவ்வாறு தெரிவிப்பவர்களின் உண்மையான விடயங்களை நான் வெளிக்கொணர்வேன் என்பதை சம்பந்தப்பட்டவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினூடாக உரிமையும், அபிவிருத்தியும் எனும் சிந்தனையூடாக நானும் செயற்படுவேன். அதற்குரிய திட்டமிடல்கள் எதிர்கால மட்டக்களப்பு 2030 எனும் அமைப்பை உருவாக்கி தூரநோக்கு சிந்தனையை வைத்துள்ளேன். அதனை அமுல்படுத்துவதற்குரிய அதிகாரம்தான் எனக்குத் தேவைப்படுகின்றது - என்றார்.






# சதொச நிறுவனத்திற்கு SLT யிடமிருந்து ஒன்லைன் விற்பனை நிலையத் தள உருவாக்கத்திற்கான தொழில்நுட்ப உதவிகள்

சில்லறை வர்த்தக நடவடிக்கைகளை நாடு தழுவிய ரீதியில் ஊக்குவிக்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு பின்னணி வழங்கும் வகையில், லங்கா சதொச லிமிட்டெட் நிறுவனம், ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்துடன் இணைந்து ஒன்லைன் சில்லறை விற்பனை நிலைய தளமொன்றை நாட்டின் மிகப்பெரிய அரச சில்லறை விற்பனை வலையமைப்பினூடாக உருவாக்குகிறது.

இக்காலத்தின் கட்டாயத் தேவையாகக் காணப்படும் இதனைப் பூர்த்திசெய்யும் வகையில் நாட்டின் முன்னணி ICT மற்றும் டிஜிட்டல் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் நிறுவனம் என்றவகையில் SLT, லங்கா சதொசவின் ஒன்லைன் இணையதளத்தை உருவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் முகாமைத்துவப்படுத்துதல் ஆகிய சகல தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளையும் செய்துகொடுக்க முன்வந்துள்ளது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) லங்கா சதொச லிமிட்டெட் நிறுவனத்தின் தலைவர் நுஷாட் எம் பெரேரா மற்றும் ஸ்ரீலங்கா ரெலிகொம் குழுமத் தலைவர் ரொஹான் பெர்னாண்டோ ஆகியோருக்கிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. SLT யின் தொழில்நுட்ப அனுபவம் மூலம், சதொச நிறுவனத்திற்கு மிகச் சிறந்த, செயற்றிறன்மிக்க ஒன்லைன் தளமொன்றை உருவாக்குவதற்கும், அதன் மூலம் வாடிக்கையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்தவும் வாய்ப்புக் கிடைக்கின்றது.




வாடிக்கையாளர்களுக்கான இந்த இணையதளத்தில் தங்களைத் தாமே பதிவுசெய்துகொள்ளவும், OTP ஊடாக தம்மைத்தாமே உறுதிப்படுத்திக்கொள்ளவும், மின்னஞ்சல் மூலம் அல்லது கையடக்கத் தொலைபேசி இலக்கம் ஊடாக தமது கணக்கிற்குள் பிரவேசிக்கவும் ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்த இணையதளத்தில் ஷொப்பிங் காட் வசதி செய்துகொடுக்கப்பட்டுள்ளதனால், வாடிக்கையாளர்கள் தாம் விரும்பிய பொருட்களைத் தெரிவுசெய்து, இறுதியில் பொருட்களைக் கொண்டுசேர்க்கவேண்டிய முகவரியைப் பெற்றுக்கொடுத்தவுடன், கொடுப்பனவுகளை மேற்கொள்ளவேண்டிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த இணையதளத்தின் மூலம் பல்வேறு வகையான கொடுப்பனவு முறைகளுக்கான வசதிகளும் உள்ளன.

இவற்றில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும்போது பணம் செலுத்துதல், வங்கியிலிருந்து நேரடியாக பணப்பரிமாற்றம் மற்றும் கடன் அட்டைகள் மூலமாகக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் போன்ற பல்வேறு இலகு முறைகளை வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

# புதிய வர்த்தக நாமத்துடன் வெள்ளி விழாவை கொண்டாடிய 'யுனிடில்' கூட்டு நிறுவனம்

வெலிபல் வன் பீ.எல்.சீ. கூட்டு நிறுவனத்தின் உறுப்பு நிறுவனமும் நாட்டின் பொதியிடல் துறையின் முதன்மை நிறுவனமுமான யுனிடில் நிறுவனம் 25ஆவது ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடியது. வெலிபல் வன் கூட்டு நிறுவனத்தின் தலைவர் தம்மிக்க பெரேரா, யுனிடில் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை, வாடிக்கையாளர்கள், வங்கியாளர்கள், வழங்குநர்கள், யுனிடில் நிர்வாகத்தினர், சிறப்பு விருந்தினர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

பொதியிடல் துறையின் புதிய போக்குகளை இனங்கண்டு அதற்கேற்ப தமது வர்த்தகநாமத்தை மாற்றியமைத்த யுனிடில் அதற்கு பொதியிடல் துறையின் முதல்வன் என்ற வாசகத்தையும் சேர்த்துள்ளது. 25 ஆண்டுகால சிறந்த சேவையின் மூலம் வாடிக்கையாளர்களின் அதீத நம்பிக்கையுடன் யுனிடில் கூட்டு நிறுவனம் வளைவு பொதியிடல் மற்றும் கடதாசி பை துறையின் முதல்வனாகவும் தடம் பதித்துள்ளது.

"புதிய தோற்றத்துடன் முன்னோக்கிச் செல்ல கிடைத்தமை மகிழ்ச்சியளிக்கிறது. வாடிக்கையாளர்களை இலக்காகக்கொண்ட ஆக்கத்திறன் மிக்க அணுகுமுறையுடன் கூடிய புதிய தொழில்நுட்பத்துடன் எதிர்காலத்தை நோக்கி பிரவேசிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். துரிதமாக சேவையாற்றும் வகையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு நாம் முதலீடு செய்யவுள்ளோம்" என யுனிடில் கூட்டு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி பெனட் கமலத் தெரிவித்தார்.



குழு உணர்வுடன் மாறிக்கொண்டிருக்கும் உலகத்திற்கேற்ப தம்மை மாற்றிக்கொண்டு ஆக்கத்திறன்மிக்கதும் காலோசிதமானதுமான வர்த்தகநாமமொன்றை பயன்படுத்தி புதிய வர்த்தகநாமத்தை உருவாக்கியதாக வெலிபல் வன் வர்த்தக நாமம் மற்றும் தொடர்பாடல் பிரதானி யசீர் சப்ராஸ் தெரிவித்தார்.




ABC Trade & Investments நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அமல்ராஜ் ஜயசீலன், ஓஷோன் எனப்படும் கிருமிநாசினி கருவியை கொழும்பு மாநகர மேயர் ரோஸி சேனாநாயக்கவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் காட்சி. இக்கருவி பொது நூலகத்தில் பொருத்தப்படவிருக்கிறது. இந்த ஓஸோன் கிருமிநாசினியானது, உட்புறக் காற்றில் காணப் படும் பாதிப்பை ஏற்படுத்தும் பக்ரீரியா வைரஸ், பூஞ்சனம் மற்றும் ஏனைய தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய அனைத்தையும் அழிக்கக்கூடிய ஒரு சிறந்த உற்பத்தியாகும்.

# தேசிய பாதுகாப்பை மேம்படுத்த சிக்னேச்சர் அறிமுகப்படுத்தும் முகக்கவசம்

இலங்கையின் முதன்மையான வர்த்தகக் குறியீடாக திகழும் சிக்னேச்சரானது, சிக்னேச்சர் (Signature) வர்த்தக குறியீட்டுடனான முகக்கவசத்தை அறிமுகம் செய்துள்ளது. இது, தொழில்சார் பணிச்சூழலின் தோற்றப்பாட்டை முழுமையாக்குவது மட்டுமன்றி, மிக முக்கியமாக இன்று உலகெங்கும் பரவும் தொற்று நோயிலிருந்து பாதுகாப்பளிக்கும் வல்லமைமிக்க ஒரு முதல்நிலை தடுப்புக் கவசமாகவும் செயற்படும்.

புதிய சிக்னேச்சர் வர்த்தகக் குறியீட்டுடனான முகக் கவசங்கள், இறுக்கமான வழிகாட்டல்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டிருக்கின்ற அதேநேரத்தில், சுவாசிப்பதை எளிதாக்குவதன் மூலம் அதனை அணிபவருக்கு முழுமையான சௌகரியத்தையும் உறுதிசெய்கின்றது.

சிக்னேச்சர் பொது முகாமையாளர் இந்திக பெரேரா கூறுகையில், "அசாதாரண சூழ்நிலைகளில் நாங்கள் இப்போது வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். அத்துடன், எமது தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் தொழில்களை உள்ளடக்கிய பொது வாழ்க்கை ஆகியவற்றை கொண்டதான எமது செயற்பரப்பு எல்லைகளை சரியாக முகாமைத்துவம் செய்வதற்கு நாம் தற்போது கற்றுக்கொண்டுள்ளோம். அந்த வகையில், நாங்கள் தொழில்சார் வாழ்க்கையை மீள ஆரம்பிக்க முற்படும்போது புதிய 'இயல்பு நிலைக்கு' பொருந்தக்கூடிய விதத்திலான அணுகுமுறையில் தொழிற்படுவதற்கு சிக்னேச்சர் நிறுவனத்தினராகிய நாம் விரும்புகின்றோம்" – என்றார்.



# பொருளாதார மறுமலர்ச்சிக்கான பல்துறை அணுகுமுறையை முன்மொழியும் வர்த்தக சம்மேளனம்

இலங்கை வர்த்தக சம்மேளனமானது தனது பல்துறை முன்மொழிதல்களை பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான பணிக்குழுவில் சமர்ப்பித்தது. பிந்தைய கொவிட்–19 பொருளாதார மீட்புக்கான பகிரப்பட்ட தூரநோக்கு குறித்து ஜனாதிபதியிடம் சமர்பிப்பதன் அடிப்படையில் இந்த முன்மொழிவானது கட்டியமைக்கப்பட்டது.

ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ள துறைகள் விவசாயம் முதல் டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் மூலதனச் சந்தைகள் வரை அனைத்து துறைகளிலும் உடனடி, நடுத்தர மற்றும் நீண்டகால திட்டங்கள் எனற அடிப்படையில் இது உள்ளடக்கப்பட்டுள்ளது. சம்மேளனக் குழுக்கள் மற்றும் அதோடு இணைந்ததாக ஒவ்வொரு துறையிலும் உள்ள நிபுணத்துவம் பெற்றவர்களின் உள்ளீட்டைக்கொண்டு இந்த முன்மொழிவானது உருவாக்கப்பட்டுள்ளது, துறை மற்றும் கருப்பொருளின் கவனம் செலுத்தும் பகுதிகளின் கீழ் உள்ள பரிந்துரைகள் பின்வருமாறு:

1. விவசாயம்

1.1. உடனடியானது

தற்போதுள்ள களஞ்சியப்படுத்தல் வசதிகளை பொருளாதார மையங்களுக்கு அருகில் மேலும் மேம்படுத்துதல், செயலற்ற நிலையில் இருக்கும் வளங்களைப் பயன்படுத்தி அவற்றை குளிர் அறைகளாக மாற்றுதல்.

குத்தகை பொது–தனியார் கூட்டு விதிமுறைகளில் இயங்குவதற்கான தீர்வுகளை வழங்க தனியார்துறை குளிர் அறை, குளிர் சங்கிலி இயக்கிகளை பரந்த ஏற்ற இறக்கங்களையும் விலைகளில் அதன் தாக்கத்தையும் சமாளிப்பதற்கு ஒரு குளிர் விநியோக சங்கிலியின் மையமாக இருப்பதற்காக இதனை ஈடுபடுத்துதல்.

போக்குவரத்துச் செலவுகளைக் குறைப்ப தற்காக – விவசாய விளைபொருட்களைக் கொண்டுசெல்வதற்காக பின்வரும் புகையிரத பாதைகளின் (ஆர்.எல்) புகையிரதத்தில் ஒரு பெட்டியை அதற்காக ஒதுக்குங்கள்.

1. ஹம்பாந்தோட்டை பு.பா: (சூரியவெவ, தனமல்வில, எம்பிலிபிட்டிய அம்பலாந்தோட்டை, ரன்ன, அங்குனுகொலபெலஸ்ஸ)
2. புத்தளம் பு.பா: (நுரைச்சோலை, புத்தளம், ஆணைமடு, சிலாபம், வனாத்தவில்லு, கருவலகஸ்வெவ)
3. பதுளை பு.பா: (வெலிமடை, பண்டாரவளை, நுவரெலியா, கண்டி)
4. யாழ்ப்பாணம் பு.பா: (கிளிநொச்சி, வவுனியா, அனுராதபுரம், தம்புத்தேகம, தம்புள்ளை, கலேவெல)
5. திருகோணமலை பு.பா: (செருவில, கந்தளாய் )
6. மட்டக்களப்பு பு.பா: (வெலிகந்த, பொலன்னறுவை)

இந்த முயற்சி பொது – தனியார் பங்குடைமை முறை வழியாக மேற்கொள்ளப்படவுள்ளது, அங்கு தனியார்துறை பெட்டியில் குளிர் அறையை அமைத்து செயற்பாட்டை நிர்வகிக்கும் அதேநேரம், இந்த கூட்டு ஒத்துழைப்பானது இலங்கை புகையிரத திணைக்களம் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு இடையிலான இலாபப் பங்கு அடிப்படையில் செயற்படும்.

# SheWorks உறுப்பினர் கௌரவிப்பு



இலங்கை முழுவதும் பாலினச் சமத்துவத்திற்கு முன்னோடியாகவும் மற்றும் வழிகாட்டியாகவும் திகழ்கின்ற 16 நபர்களில் ஒருவராக AIA இன் சட்ட, ஆட்சி மற்றும் செயற்பாடுகளின் பிரதான அதிகாரி மற்றும் பணிப்பாளர் சத்துரி முனவீர கௌரவிக்கப்பட்டுள்ளதை அறிவிப்பதில் AIA இன்ஷூரன்ஸ் மிகவும் பெருமையடைகின்றது.

IFC-DFAT SheWorks இலங்கைக் கூட்டாண்மையினால் #TogetherWeCan திட்ட துவக்கத்திலேயே இவ்வங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இத்திட்டமானது பெண்களுக்கான தொழில்வாய்ப்புகளை அதிகரிப்பதற்கு மீதமுள்ள தனியார்துறையில் சாத்தியமான பணி வாய்ப்புகளை உருவாக்குவதுடன், மிகவும் வேறுபட்ட மற்றும் சமமான பணியிடங்களுக்காக 16 நிறுவனங்களின் வியாபாரத் திட்டங்களையும் விஸ்தரிக்கின்றது.

விருது வழங்கல் நிகழ்வானது அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 1,70,000 இற்கும் அதிகமான ஊழியர்கள் மத்தியில் பெண்களை ஆட்சேர்ப்புச் செய்தல், ஊக்குவித்தல் மற்றும் அவர்களை நிறுவனத்தில் தொடர்ந்தும் தக்கவைத்தல் போன்ற 100இற்கும் அதிகமான அர்ப்பணிப்புகளை மேற்கொண்டிருக்கின்ற 16 SheWorks உறுப்பினர்களுக்கும் இவ்விடத்தில் நன்றிகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

# அமானா வங்கி 'ஃபிச்' தரப்படுத்தலில் உயர்வு

தரப்படுத்தல் மீளாய்வின் பிரகாரம், அமானா வங்கியின் தரப்படுத்தல் தேசிய நீண்டகாலத் தரப்படுத்தல் BB(lka) என்ற நிலையிலிருந்து உறுதியான எதிர்காலத்தைக் கொண்ட BB+(lka) நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள வழங்குநர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள ஒப்பீட்டுக் கடன் தகுதிநிலை மாற்றங்களைப் பிரதிபலிக்கும் வகையில் இலங்கைத் தேசிய தரப்படுத்தல் அளவீடுகளை மறுசீரமைக்கும் பிரகாரம் ஃபிச் ரேட்டிங்ஸ் அமைப்பு புதிய தரப்படுத்தல் மீளாய்வை மேற்கொண்டது.

தரப்படுத்தலின் உயர்ச்சி பற்றி அமானா வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி முகமட் அஸ்மீர் கருத்து வெளியிடுகையில், "வங்கி தொழில்துறை சவால்களை எதிர் நோக்கும் இந்த வேளையில், ஃபிச் ரேட்டிங்கின் சமீபத்திய மீளாய்வின் பிரகாரம் எமது தரப்படுத்தல் ஒரு படி முன்னேற்றப்பட்டமை எமக்குப் பெருமையளிக்கிறது. எம்மில் தொடர்ச்சியாக நம்பிக்கை வைத்திருக்கும் எமது வங்கியுடன் இணைந்து செயற்படும் அனைவருக்கும் இச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்" என்று கூறினார்.

# 'கொவிட் -19' தொற்றுநோய்க்குப் பின்னர் சுற்றுலாத்துறைக்கு அனுபவம் வாய்ந்த பயணியின் முக்கியத்துவம்

"அனுபவ பொருளாதாரம் இலங்கையை எவ்வாறு நிலையான முறையில் மீட்டமைத்தல் மற்றும் தொழில்துறையின் அனைத்து துறைகளுக்கும் பார்வையாளர்களைக் கொண்டுசெல்லல்" என்பது தொடர்பான இணையமூலமான புதிய விழிப்புணர்வுக் கருத்தரங்குத் தொடரை இலங்கை சுற்றுலாத்துறை மிகப் பெரியளவில் வெற்றிகரமாக நடத்தியது. நிபுணர் குழாமானது, அவுஸ்திரேலிய சுற்றுலாத்துறையின் முன்னாள் பிரதித் தலைவர் அண்ட்ரூ பெயார்லி டுவெண்டி 31 கன்சல்டிங் நிறுவனத்தின் பங்காளர் ஒலிவர் மார்ட்டின மற்றும் கைட்சர்ஃபிங் லங்காவின் இணை நிறுவுனர் மற்றும் உரிமையாளர் டில்சிறி வெலிகல ஆகியோரை உள்ளடக்கியிருந்தது. தொழில்துறையானது 2020 ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் பயணிகளுக்கு மீண்டும் திறக்கப்படுவதால், நவீனகால சுற்றுலாப் பயணிகளுக்கான பிரதான ஊக்குவிப்பாளர்களையும் சுற்றுலா வணிகங்களும் பிரயாண இலக்குகளும் அவர்களின் எதிர்பார்ப்புகளை எவ்வாறு பூர்த்திசெய்யமுடியும் என்பது பற்றிய கலந்துரையாடலானது மிகப்பொருத்தமான சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட்டது.



தனது அறிவைப் பகிர்ந்துகொண்டு, ஒலிவர் மார்ட்டின் இரண்டு வகையான பயணிகளின் உந்துதல் நடத்தை அடிப்படையில் அவர்களின் உந்துதல்களை எடுத்துரைத்தார்.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.


# "போட்டியில் இரண்டு தவறுகள் செய்தேன்"

## 12 ஆண்டுகளின் பின்னர் சொல்கிறார் நடுவர் ஸ்டீவ் பக்னர்




இந்திய மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் கடந்த 2008ஆம் ஆண்டு நடைபெற்ற டெஸ்ட் போட்டியின்போதுதான் இரண்டு தவறுகள் செய்ததாக 12 ஆண்டுகள் கழித்து நடுவர் ஸ்டீவ் பக்னர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரிவித்துள்ள நடுவர் ஸ்டீவ் பக்னர், "நான் 2008ஆம் ஆண்டு இந்திய – அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் சிட்னியில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இரண்டு தவறுகள் செய்தேன். முதல் தவறு இந்திய அணி நன்றாக ஆடிக்கொண்டிருந்தபோது அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரருக்கு ஆட்டமிழப்பு வழங்காமல் அவர் சதம் அடித்தார்.

"இரண்டாவது தவறு இறுதிநாளில் செய்த தவறாகும். இந்தத் தவறு இந்தியாவின் வெற்றியையே பறித்தது. இருந்தாலும் 5 நாட்களில் இரண்டு தவறுகள்தான். நான் மட்டும்தான் முதன் முதலில் டெஸ்ட்டில் தவறு இழைத்தேனா? ஆனாலும் இந்த 2 தவறுகள் என்னை இன்றும் அச்சுறுத்தி வருகிறது" என தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த அவர், "வர்ணனையாளர்களுக்கு பந்து துடுப்பு மட்டையில் பட்ட சத்தம் விக்கெட்டில் காணப்படும் மைக் மூலமாக கேட்கிறது. ஆனால், நடுவர்கள் உறுதியாக இதில் செயற்பட முடியாது. இவையெல்லாம் பார்வையாளர்களுக்குத் தெரியாது" எனத் தெரிவித்தார்.

அன்ரூ சைமண்ட்ஸ், ரிக்கி பொண்டிங் ஆகிய இருவரும் ஆட்டமிழந்தார்கள். ஆனால், அந்த இரண்டு ஆட்டமிழப்புகளையும் ஸ்டீவ் பக்னர் மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆர்ச்சரின் செயலால் பல நூறு கோடி ரூபா இழப்பு ஏற்பட்டிருக்கும் !




விதிமுறையை மீறிய ஜொப்ரா ஆர்ச்சரின் செயலால் பெருந்தொகை இழப்பு ஏற்பட்டிருக்கும் என இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் பணிப்பாளர் ஆஷ்லி ஜைல்ஸ் கருத்து தெரிவித்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் தொடருக்காக இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் மருத்துவ உயிர் பாதுகாப்பு வலயத்திலிருந்த நிலையில், வேகப்பந்து வீச்சாளர் ஜொப்ரா ஆர்ச்சர் கொரோனா தடுப்பு விதிமுறைகளை மீறி தனது வீட்டுக்குச் சென்றது சர்ச்சையை கிளப்பியது. இதையடுத்து அவரை 2ஆவது டெஸ்ட் போட்டியிலிருந்து நீக்கிய இங்கிலாந்து கிரிக்கெட் சபை ஆர்ச்சரை 5 நாட்கள் தனிமைப்படுத்திக்கொள்ளவும் உத்தரவிட்டது.

இந்த விவகாரம் குறித்து இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பணிப்பாளர் ஆஷ்லி ஜைல்ஸ் கூறுகையில், "ஆர்ச்சரின் நடத்தை இந்த ஆண்டுக்கான இங்கிலாந்து கிரிக்கெட்டின் ஒட்டுமொத்த உள்ளூர் கிரிக்கெட் திட்டங்களை (அடுத்து 3 அணிகள் இங்கிலாந்து வந்து விளையாடவுள்ளன) பாழ்படுத்தியிருக்கும்."

"சிறிய செயல் என்றாலும் அதன் மூலம் எங்களுக்கு பல நூறு கோடி ரூபா இழப்பு ஏற்பட்டிருக்கக்கூடும். ஆர்ச்சர் திறமையான இளம் வீரர். இளைஞர்கள் தவறு செய்வது இயல்பு. இந்தத் தவறிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். அவருக்கு நாங்கள் ஆதரவாக இருப்போம். இருப்பினும், அவர் ஒழுங்கு நடவடிக்கையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்'' எனத் தெரிவித்தார்.




## இலங்கையின் சந்திக்க ஹத்துருசிங்கவுக்கு அவுஸ்திரேலியாவில் புதிய பதவி

கடந்த 2011ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அவுஸ்திரேலியாவின் உள்ளூர் கிரிக்கெட் அணிகளில் ஒன்றான நியூ சௌத் வேல்ஸ் அணியின் உதவி பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றிய இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்றுவிப்பாளர் சந்திக்க ஹத்துருசிங்க மீண்டும் அவ்வணிக்கு திரும்பி அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் பிரபல பயிற்றுவிப்பாளர்களில் ஒருவரான கிரிஸ் ரோஜர்ஸ் மற்றும் மேற்கிந்திய தீவுகளின் உதவி பயிற்றுவிப்பாளர் டொபி ரெட்போட் ஆகியோரும் குறித்த பதவிக்கு விண்ணப்பித்திருந்த நிலையில், சந்திக ஹத்துருசிங்கவுக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது.




இதேவேளை, சந்திக்க ஹத்துருசிங்க இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுவந்த நிலையில், சில குளறு படிகள் காரணமாக ஒப்பந்தக் காலத்திற்கு முன்னரே இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அதன்பின்னர் சந்திக்க ஹத்துருசிங்க பங்களாதேஷ் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக மீண்டும் இணைவார் என எதிர்பார்த்திருந்த நிலையிலும் ரசல் டொமிங்கோ பங்களாதேஷ் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நியூ சௌத் வேல்ஸ் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக பில் ஜெக்கஸ், வேகப் பந்துவீச்சு பயிற்றுவிப்பாளராக அன்ரே எடம்ஸ், சுழல் பந்துவீச்சு பயிற்றுவிப்பாளராக அந்தோனி க்ளார்க் மற்றும் தற்போது துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக சந்திக்க ஹத்துருசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## கொரோனாவிலிருந்து மீண்டு பயிற்சிகளை ஆரம்பித்த உலகின் முதல்நிலை டென்னிஸ் வீரர்



உலகின் முதல்நிலை டென்னிஸ் வீரரான சேர்பியாவைச் சேர்ந்த வீரர் நோவக் ஜோகோவிச் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில், தற்போது வைரஸிலிருந்து மீண்டு டென்னிஸ் பயிற்சிகளுக்குத் திரும்பியுள்ளார்.

டென்னிஸ் விளையாட்டில் உயர்ந்த பட்டமான கிராண்ஸ்லாம் பட்டத்தை 17 தடவைகள் வென்ற சேர்பியாவைச் சேர்ந்த வீரர் நோவக் ஜோகோவிச் அண்மையில் சேர்பியாவில் கண்காட்சி டென்னிஸ் தொடரொன்றை நடத்தினார். இதன்போது கொரோனா வைரஸ் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்கத் தவறிய நோவக் ஜோகோவிச், அவரது மனைவி மற்றும் பல்கேரியாவைச் சேர்ந்த டொமிட்ரோவ் உள்ளிட்ட பல வீரர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டது.

இந்நிலையில், நோவக் ஜோகோவிச், அவரது மனைவி ஆகியோர் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மீண்ட நிலையில், தற்போது பெல்கிரேடில் அமைந்துள்ள நோவக் டென்னிஸ் மையத்தில் நோவக் ஜோகோவிச் சக வீரர் பிலிப் கிராஜினோவிச்சுடன் இணைந்து பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

# ஆரையம்பதி ஏசியன் சம்பியனானது...






மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த 64 அணிகளை உள்ளடக்கி துறைநீலாவணை சுப்பர்கிங்ஸ் விளையாட்டுக் கழகம் ஏற்பாடுசெய்த மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு துறைநீலாவணை மகாவித்தியாலய மைதானத்தில் கழகத் தலைவர் சு. மனோராஜ் தலைமையில் இடம்பெற்றது.

ஆரையம்பதி ஏசியன் விளையாட்டுக் கழகம் சம்பியனாக தெரிவாகி சம்பியன் கிண்ணத்தையும் இருபதாயிரம் ரூபா பணப்பரிசையும் பெற்றுக்கொண்டது. கல்முனை SMS விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்துக்கான கிண்ணத்தையும் பத்தாயிரம் ரூபா பணப்பரிசையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதில், ஆரையம்பதி ஏசியன் கழக வீரர் தர்சன் இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகன்.

தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரர் - அத்தீப் ( sms அணி), தொடரின் சிறந்த பந்துவீச்சாளர் - ஜெசாந்த் ( sms அணி)

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பி. திவிரதனும், பிரதிக் கல்விப் பணிப் பாளரும் விசேட அதிதியாக மகாவித்தியாலய பிரதி அதிபர் எஸ். செல்வமும் ஆன்மீக அதிதியாக சிவஸ்ரீ. இரத்தினசபா சசி ஐயாவும் ஏனைய அதிகளாக சுப்பர் கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின் மூத்த உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.




ஆரையம்பதி ஏசியன் விளையாட்டுக் கழகம்



கல்முனை SMS விளையாட்டுக் கழகம்

# 2020 டோக்கியோ ஒலிம்பிக் 2021 ஜூலையில் ஆரம்பம்

## தொடர்ச்சியாக 17 நாட்கள் நடைபெறும்

2020ஆம் ஆண்டு நடைபெறவிருந்த ஒலிம்பிக் விளையாட்டு விழாவின் புதிய போட்டி அட்டவணையை ஒலிம்பிக் ஏற்பாட்டுக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி ஒலிம்பிக் விழாவானது 2021ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி முதல்




ஓகஸ்ட் 8ஆம் திகதி வரை தொடர்ச்சியாக 17 நாட்கள் நடைபெறவுள்ளது.

2020 ஒலிம்பிக் போட்டிகளை இதுவரையில் நடைபெற்றிராத ஒலிம்பிக் போட்டிகளைபோன்று வெகு விமரிசையாக நடத்துவதற்கு ஜப்பான் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. எதிர்பாராதவிதமாக கொரோனா வைரஸ் முழு உலகையும் காவுகொண்டதன் காரணமாக முழு திட்டமும் தவிடுபொடியாகியது.

ஒலிம்பிக் வரலாற்றில் முதல் தடவையாக ஒரு வருடம் பிற்போடப்பட்ட நிலையில், டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகள் "டோக்கியோ 2020 ஒலிம்பிக்" என்ற பெயரிலேயே நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மொத்தமாக 33 வகையான விளையாட்டுகளில் 339 நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. டோக்கியோ ஒலிம்பிக்கின் ஆரம்ப விழா 2021 ஜூலை 23ஆம் திகதி ஜப்பான் நேரப்படி இரவு 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# சீத்துவக்கேடு 26



காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்



தமிழரின்ரை வாழ்க்கையில சித்திரை மிக முக்கியமான மாதம். அதிலும் உந்த சித்திரா பருவம், சித்திரைக் கஞ்சி, சித்திரைக் குழப்பம், சித்திரைச் சுழி, சித்திரைச் சிலம்பன், சித்திரைக் கதை எண்ட சொல்லுகளை நாங்கள் பாவிக்கிறம் எல்லோ. உதுகளின்ரை பாவனை சித்திரையின்ரை சிறப்பை எங்களுக்கு வடிவா விளக்குது கண்டியோ எண்டு அப்பு சொல்லுவார். சித்திரையோடதான் இளவேனில் காலம் தொடங்கும். இந்த இளவேனில் காலத்திலதான் வேம்பு மாதிரி கன மரங்கள் பூக்கும் எண்டுவார்.

அப்பு இப்பிடிச் சொன்னதைக் கேட்டதும் தமிழர் ஆதிகாலத்தில இருந்தே ஒரு வருசத்தை கார்காலம், குளிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனில்காலம், முதுவேனில்காலம் எண்டு ஆறு பருவங்களாக பிரிச்சு வைச்சவை எண்டும், சித்திரை வைகாசியை உள்ளடக்கியது இளவேனில் காலம் எண்டும், ஆனி ஆடி மாதங்களை உள்ளடக்கியது முதுவேனில் காலம் எண்டும், ஆவணி புரட்டாசியை உள்ளடக்கியது கார்காலம் எண்டும், ஐப்பசி கார்த்திகையை உள்ளடக்கியது கூதிர்காலம் எண்டும், மார்கழி தையை உள்ளடக்கியது முன்பனிக்காலம் எண்டும், மாசி பங்குனியை உள்ளடக்கியது பின்பனிக்காலம் எண்டும் நான் பள்ளிக்கூடத்தில படிச்சனான் எண்டு ஆச்சி சொல்லுவா.

உது மட்டுமில்லை தொல்காப்பியத்தில முல்லை நிலத்துக்குக் கார்காலமும், குறிஞ்சி நிலத்துக்குக் கூதிர்காலமும், முன்பனிக்காலமும், மருதத்துக்கும், நெய்தலுக்கும் எல்லா பருவகாலங்களும், பாலைநிலத்துக்கு இளவேனில், முதுவேனில், முன்பனி ஆகிய காலங்களும் உரியவை எண்டுதான் தொல்காப்பியத்தில படிச்ச ஞாபகம் இருக்கு எண்டும் சொல்லுவா.

உந்த சித்திரை மாசத்தில வீசுற சின்ன புயற்காத்தை சித்திரைக் குழப்பம் எண்டு ஆக்கள் சொல்லுறவை. இந்தக் குழப்பம் மழையையும் கொண்டுவரும். இந்த சித்திரை மழை கமக்காரருக்கு சரியான சந்தோசத்தை தரும். இந்த சித்திரை மழையைப் பற்றி சித்திரை மழை சின்னப்படுத்தும். சித்திரை மழை சினை அழிக்கும், சித்திரை மழை செல்வ மழை, சித்திரை மழை பெய்தால் பொன் ஏர் கட்டலாம், சித்திரை பெய்ஞ்சும் கெடுக்கும், பெய்யாமலும் கெடுக்கும், சித்திரை மழை பத்தரைமாற்றுத் தங்கம் எண்டு நிறைய் பழமொழிகள் ஊர்வழிய புழக்கத்தில இருக்கெண்டு அப்பு சொல்லுவார். இப்பிடி வாற இந்த சித்திரை மழைக்கு ஒரு உழவு எல்லாரும் உழுவினம். அதோட சிலர் வரம்பு கட்டுற வேலையும் செய்வினம்.

இந்த சித்திரை மாசத்தை தொடர்புபடுத்தி இன்னும் கன பழமொழிகள். ஆக்கள் எங்கட ஊரில எண்டில்லை பிற ஊர்வழியையும் சொல்லுறவை எண்டு ஆச்சி சொல்லுவா. என்னணை ஆச்சி அதுகளைக் கொஞ்சம் சொல்லணை எண்டால், கொஞ்சம் பொறடா மோனை எண்டு வாயில வெத்திலை பாக்கை போட்டு ஒரு குதப்பு குதப்பிப் போட்டு ஆச்சி சொன்ன பழமொழியளைக் கேட்டா ஒரே மலைப்பா இருக்கும்.

சித்திரை அப்பன் தெருவிலே, சித்திரை எள்ளைச் சிதறி விதை, சித்திரை என்று சிறுக்கிறதும் இல்லை பங்குனி என்று பருக்கிறதும் இல்லை, சித்திரை என்று சிறுக்கிறதும் இல்லை வைகாசி என்று வளர்வதும் இல்லை, சித்திரைக் கோடையில் உத்தரவு சாடை, சித்திரைத் தேர் போல், சித்திரைப் புழுதி பத்தரை மாற்றுத் தங்கம், சித்திரை பத்தில் சிறந்த பெருங்காற்று ஐப்பசி பத்தில் அறையில் அடைபடும், சித்திரை பத்தில் சிரித்தெழுந்தார் சோழகனார், சித்திரை பத்தில் சிலம்பன் பிறந்தால் அக்குடி நாசம், சித்திரை பத்துக்குமேல் சிறந்த பெருங்காற்று எண்டு ஆச்சி ஒருதொகை பழமொழியளை அவிட்டு விடுவா.

நாங்கள் சித்திரை மாசத்தில சித்திரை நட்சத்திரம் அண்டைக்கு வாற பருவத்தை சித்திராப் பருவம் எண்டு சொல்லுவம். முந்தி சோழநாட்டில காவிரி கலக்கும் இடத்தில ஒரு மாதம் முழுக்க கொண்டாடப்படும் இந்திர விழாவின் முதல்நாள் இந்த சித்திராப் பருவம் அண்டைக்குத்தான் தொடங்கும். இதை சிலப்பதிகாரத்தில சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென எண்டு இளங்கோவடிகள் சொல்லுறார் எண்டு ஆச்சி சொல்லுவா. இந்த சித்திராப் பருவம் அண்டைக்குத்தான் எங்கட கோயில்களிலை சித்திரகுப்தன் கதை படிச்சு கஞ்சி காச்சி ஊத்துவினம். இதை சித்திரைக் கஞ்சி ஊத்திறது எண்டு சொல்லுவினம்.

(தொடரும் )

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம்

**நேற்றைய தொடர்ச்சி...**

தற்போது நடைமுறையிலுள்ள பொறிமுறைகளும் மற்றும் செயன்முறைகளும் பலப்படுத்தப்படவேண்டும்.

- ஏற்றுமதிச் சாத்தியமுள்ள விவசாயம் சார்ந்த தொழில்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்தப்படும். நாட்டில் பரந்த சந்தையைக்கொண்ட பொருட்களின் பயிர்ச்செய்கை ஊக்குவிக்கப்படும். திராட்சைப்பழங்களின் உற்பத்தியும் ஏனைய பழங்களின் பதப்படுத்தல் மற்றும் தகரத்தில் அடைத்தல் ஆகியவற்றுக்கான ஆலைகள் நிறுவப்பட நடவடிக்கை எடுக்கவேண்டும்.
- சேதன வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை ஊக்குவிப்பதற்கான ஒவ்வொரு முயற்சியையும் செய்வோம்.
- பனைவள உற்பத்திகளை நவீனமயப்படுத்துதலும் அதற்கான நவீன பொறிமுறைகளை கையாண்டும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்தலும் வேண்டும்.
- யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில் மீன்களைப் பதனிடுவதற்கும் தகரத்திலடைப்பதற்குமான ஆலைகளை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- கால்நடை மற்றும் பாற்பொருட்களின் உற்பத்தி ஊக்குவிக்கப்படும்.
- பல்வேறு திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் மூலம் நீர் பற்றாக்குறை பிரச்சினைகள் குறைக்கப்படும். நமது விவசாயத் தேவைகளுக்கான நீர்வளத்தை அதிகரிக்கும் வகையில் வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து சிறு குளங்களையும் புனரமைக்கும் திட்டமும், வடக்கிலுள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முன்னெடுப்புகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
- பல்கலைக்கழகங்களுக்குள் நுழைய முடியாதவர்கள் சம்பந்தப்பட்ட துறைகளில் உயர்கல்வியைத் தொடர புதிய நிறுவனங்களை நிறுவுவதன்மூலம் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில்நுட்ப, தொழில் பயிற்சி ஆகியவற்றிற்கு அதிகரித்த வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.
- அனைத்து முன்னெடுப்புகளிலும் எப்போதும் பாலின சமத்துவமின்மை மற்றும் பொருளாதாரத்துறையில் சமத்துவமின்மை காணப்படுவதை கவனத்திற்கொள்ள வேண்டும். மேலும், பெண்களின் தனித்துவமான தேவைகள் மற்றும் பிரச்சினைகள் கவனிக்கப்படுவதும் உறுதிசெய்யப்பட வேண்டும்.
- அரச வேலைவாய்ப்பின் மூலம் கிடைக்கும் பிரதான வருமானம். பாடசாலைகள் மற்றும் அரச நிர்வாகத்திலுள்ள அனைத்து வெற்றிடங்களும் தகுதியான நபர்களால் நிரப்பப்படவேண்டும். அவர்களின் தகுதிப்படி அவர்களுக்கு கிடைக்கவேண்டிய பதவி உயர்வுகளுக்கெதிராக எழக்கூடிய தடைகளை நீக்க முயற்சிப்போம்.
- யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வெளியே வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களிலும் கலாசார நடவடிக்கைகளை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- மது மற்றும் போதைப்பொருளுக்கு அடிமையாதல் வலுவாகவும் திறமையாகவும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும்.
- எல்லாவகையான வன்முறைகளும் முடிவுக்குக் கொண்டுவரப்படும். குறிப்பாக, பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கெதிரான துஷ்பிரயோகங்கள் நிறுத்தப்படவேண்டும்.
- வடக்கு மாகாணத்திலுள்ள முன்பள்ளி மற்றும் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களை பாதிக்கும் அனைத்து சிக்கல்களும் உடனடியாக கவனத்திலெடுக்கப்பட்டு, அவர்களுக்கு திருப்திகரமான முறையில் அப்பிரச்சினைகள் தீர்க்கப்படும்.
- வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்து தொல்பொருள் தளங்களும் அந்தந்த மாகாண சபைகளின் கட்டுப்பாட்டு எல்லைக்குள் கொண்டுவரப்படும்.

**8. இடம்பெயர்ந்த மற்றும் நில உரிமைகளின் உரிமைகள்**

## 8.1. இடம்பெயர்ந்தோரின் உரிமைகள் மற்றும் காணி உரிமை

ஆயுதப் போராட்டத்தினால், 5,00,000 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வீடற்றவராகி நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டனர். கடந்த பல ஆண்டுகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அயராத முயற்சிகளின் காரணமாக, 2015 ஜனவரியில் ஆட்சிமாற்றத்துக்குப் பின்னர், நிலங்களை திருப்பித் தருவதற்கும், வடக்கில் வலிகாமத்திலிருந்தும் கிழக்கில் சம்பூரிலிருந்தும் இடம்பெயர்ந்த தமிழ்மக்களை மீளக்குடியமர்த்துவதற்கும் முடிவுகள் எடுக்கப்பட்டன. மேலும், கேப்பாப்பிலவில் 1,000 ஏக்கர் விவசாய நிலங்களும் விடுவிக்கப்பட்டுள்ளன. இருந்தபோதிலும், இலங்கை அரசு, சர்வதேச சமூகம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு மாறாக, பலர் இன்னமும் தங்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படவில்லை. இடம்பெயர்ந்தவர்களுக்கு இன்னும் நிரந்தரத் தீர்வு எட்டப்படவில்லை. யுத்தத்தின்போது வடக்கு, கிழக்கில் இடம்பெயர்ந்த மக்கள் தாமதமின்றி தங்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். மேலும், இவர்களுக்கு வீட்டு மற்றும் வாழ்வாதார வசதிகள் அவர்களுடைய சுயமரியாதையை மதிக்கும் வகையில் வழங்கப்படவேண்டும். இராணுவக் கட்டுப்பாட்டின்கீழுள்ள தனியார் நிலம் விடுவிக்கப்பட்டு, ஆக்கிரமிப்பு காலத்திற்குரிய இழப்பீடு உரிமையாளர்களுக்கு வழங்கப்படவேண்டும். மிரட்டி அல்லது நிர்ப்பந்தித்து கையகப்படுத்தப்பட்ட நிலம் அதன் உரிமையாளர்களுக்கு திருப்பி வழங்கப்படவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிலங்களை விடுவிப்பதற்கு கேப்பாப்பிலவு மக்களைபோல் அயராத பிரசார முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் அனைத்து மக்களுக்கும் அதன் முழு ஆதரவை வழங்கும்.

மீள்குடியேற்றத் திட்டங்கள் சமத்துவமான முறையில் செயற்படுத்தப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துகிறது. குறிப்பாக, பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் மற்றும் முதியவர்கள் போன்ற ஒடுக்கப்பட்ட மற்றும் அதிகம் பாதிக்கப்பட்ட குழுக்கள், அவயங்கள் இழந்தவர்கள் தொடர்பில் மேலதிக கவனம் செலுத்தப்படவேண்டும். மிக முக்கியமாக, இத்தகைய திட்டங்கள் செயற்படுத்தப்படும்போது வெளிப்படைத்தன்மை அவசியம். நாட்டைவிட்டு வெளியேறிய நபர்கள் நாட்டுக்கும் தங்கள் வீடுகளுக்கும் திரும்பி வருவதற்கு அனுமதிக்கப்படவேண்டும். மேலும், அவர்கள் திரும்பி வருவதற்கு ஏதுவான சூழ்நிலையும் உருவாக்கப்படவேண்டும். குறிப்பாக, தென்னிந்தியாவில் சுமார் 1,00,000 அகதிகளின் மீள்வருகை துரிதப்படுத்தப்பட்டு இவர்களின் மீள்குடியேற்றம் மற்றும் மறு ஒருங்கிணைப்பிற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

## 8.2 காணி

காலங்காலமாக நடைபெற்றுவரும் அரசின் காலனித்துவப்படுத்துதல் மற்றும் சிங்களமயமாக்குதல் முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதனால் வடக்கு, கிழக்கு மக்களின் நில உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலுவாக நம்புகிறது. மகாவலி, காடுகள், வனவிலங்கு மற்றும் தொல்பொருள் தொடர்பான சட்டங்கள் தமிழ் மக்கள் நில உரித்துகள் பாதிப்படையும் வகையில் மறைமுகமாக பயன்படுத்தப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்துக்கான தொல்பொருள் தளங்களுக்கான ஜனாதிபதிச் செயலணி நியமிக்கிப்பட்டதும் இத்திசையில் பயணிக்க அரசு எடுத்த அப்பட்டமான பாரபட்ச முயற்சியாகும். ஆகையால், நில ஆவணங்களை இழந்தவர்கள் அல்லது ஆவணங்கள் பதிவுசெய்யப்படாத நபர்கள் மற்றும் பதிவு மறுக்கப்பட்டதால் அல்லது ஆவணப்படுத்தல் செயன்முறைகளை அணுகமுடியாமல் போனவர்கள் ஆகிய அனைவருக்கும் நில உரிமை மறுக்கப்படுவதில்லை என்பதை உறுதிப்படுத்தவேண்டியதன் அவசியத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கீகரிக்கிறது. தொல்பொருள் இடங்களை பாதுகாத்தல் என்ற போர்வையில் பிராந்தியத்தை சிங்களமயமாக்கும் முயற்சிகளையும், பிராந்தியத்தின் சமூகங்களின் மத வழிபாட்டுத்தலங்களை அழிப்பதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்த்து நிற்கின்றது. அரச மற்றும் குறிப்பாக, தனியார் நிலங்களை அபிவிருத்தி என்ற பெயரில் பெரும்பான்மைக் கொள்கைகளை முன்னெடுத்தல் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரிக்கையாய் இருக்கும். அத்துடன். இதுபோன்ற முயற்சிகளின் பாதகமான சுற்றுச்சூழல் தாக்கங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவதானமாய் எதிர்த்து நிற்கும். ஏறக்குறைய மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட முடிவான கல்முனைக்கென்றொரு தனித்த தமிழ்ப் பிரதேச செயலகம் அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் வலியுறுத்தி முன்வைக்கின்றது.

## 9. முன்னாள் போராளிகளின் வாழ்க்கையை மீள்கட்டியெழுப்புதல்

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்களாக அரசாங்கத்தால் அடையாளம் காணப்பட்ட நபர்கள் தடுத்துவைக்கப்பட்டு இதன்போது பல உரிமை மீறல்களுக்கு உள்ளாகினர். அவர்கள் விடுவிக்கப்பட்டதன் பின்பு அவர்களின் வாழ்க்கையை மீள்கட்டியெழுப்பத் தேவையான ஆதரவு அவர்களுக்கு வழங்கப்படவில்லை. எதிர்மாறாக, அவர்கள் பாதுகாப்புப் படைகள் மற்றும் உளவுத்துறையினரால் கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்படுவதோடு சமூகத்தினாலும் ஓரங்கட்டப்படுகின்றனர். இது அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை அணுகுவதற்கும் அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் பெரும் சவாலாக அமைந்தது. மேலும், பலர் தொடர்ந்தும் பயங்கரவாத புலனாய்வுத்துறையால் **(TID)** விசாரணைக்கு அழைக்கப்படுகின்றனர். இவ்விசாரணையானது தற்காலத்தில் நடந்த ஒரு குற்றத்திற்கான விசாரணையாக அல்லாது, 2009இற்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அவர்களின் நிலைப்பாடு மற்றும் பங்கு ஆகியவற்றில் மட்டுமே கவனம் செலுத்தியதாகத் தென்பட்டது. யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஒரு தசாப்தத்துக்கும் மேலாக, அரச புனர்வாழ்வுத் திட்டங்களுக்கு அனுப்பப்பட்டவர்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதில் பல தடைகளை எதிர்கொள்கின்றனர். எனவே, அவர்களின் தேவைகள் கண்டறியப்பட்டு பிரச்சினைகள் நிவர்த்திசெய்யப்பட வேண்டும். அவர்களுக்குப் பொருத்தமான வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொள்ள திட்டங்கள் தீட்டப்படும் அதேவேளை, அவர்கள் அரசால் துன்புறுத்தல் அல்லது அச்சுறுத்தல்களுக்கு ஆளாகாமல் இருப்பதை உறுதிசெய்யவேண்டும். அத்தோடு, அவர்கள் முற்றுமுழுதாக சமூகத்துள் உள்வாங்கப்படுதலும் வேண்டும். பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் பல காரணிகளால் மாறுபட்ட பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இவ்வர்க்கத்தினருக்கு சிறப்பு உதவி நடவடிக்கைகள் கிடைக்கபெறவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துகிறது.

## 10. பாலின சமத்துவம்

வடக்கு, கிழக்கு மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகளை நிவர்த்திசெய்யும்போதும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க உழைக்கும்போதும பாலின சமத்துவமின்மையை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புரிந்துகொண்டுள்ளது. யுத்தத்தின்போது ஆண்களோடு ஒப்பிடுகையில், பெண்களே பல்வேறு வித்தியாசமான முறைகளில் பாதிக்கப்படுகின்றனர். மேலும், பெண்கள் வரலாற்று, அமைப்புசார் மற்றும் கட்டமைப்புசார் பாகுபாடுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையால், அரசியல் தீர்வு முதல் வடக்கு, கிழக்கை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் என ஒவ்வொரு முயற்சியும், பெண்களை எவ்வாறு பாதிக்கும் என்பதை கருத்திற்கொண்டு பெண்களின் குறிப்பிட்ட தேவைகள் மற்றும் இன்னல்கள் தீர்க்கப்படவேண்டும்.

## 11. சர்வதேச சமூகத்தின் வகிபாகம்

தமிழ் மக்கள் உள்ளகப் பொறிமுறைகளினூடாக தமது தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமானதும், ஏற்றுக்கொள்ளக்கூடியதுமானதொரு தீர்வைப் பெற்றுக்கொள்ள அர்ப்பணிப்புடனே இருந்துவந்துள்ளனர். இலங்கை அரசே கிட்டிய சந்தர்ப்பங்களையெல்லாம் உதறித் தள்ளியது மட்டுமல்லாது, தொடர்ச்சியாக இலங்கைத் தமிழர் மீது இனஅழிப்பைக் கட்டவிழ்ப்பதனூடாக அடக்கியாளவும் தலைப்பட்டது. இலங்கை அரசின் இந்த நிலைப்பாடே தேசிய இனப்பிரச்சினையை சர்வதேசமயமாக்கியதோடு, சர்வதேச வகிபாகத்தை ஏற்றுக்கொள்ளவேண்டிய கட்டாயத்தையும் இலங்கை அரசுக்கு ஏற்படுத்தியது. இலங்கை அரசின் இந்த நிலைப்பாட்டின் தவிர்க்கமுடியாத விளைவான ஆயுதப் போராட்டம் இன்று முடிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது சர்வதேச தலையீட்டின்மூலம் விளைந்த சிறிதளவான நன்மைகளையும் களைய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இலங்கையில் வாழும் பல்லின மக்களிடையே நிரந்தரமானதும், நிலையானதுமான நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அதன்மூலம் அனைவரும் சமத்துவமுள்ள குடிமக்களாக வாழ வழிசெய்ய சர்வதேச வகிபாகம் தொடர்வது முன்னைவிட தற்போது அத்தியாவசியமானது என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாகும். இதனடிப்படையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது சர்வதேச சமூகத்தின் முயற்சிகளோடு தொடர்ந்தும் ஈடுபடுவதோடு, தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஐ.நா. சிறப்பு நடைமுறைகள் போன்ற சர்வதேச வழிமுறைகளைப் பயன்படுத்துவதில் அதன் கவனத்தை செலுத்தும். அரசாங்கத்தின் இணைஅனுசரணையுடன் நிறுவப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுத் தீர்மானங்களான 30/1, 34/1 மற்றும் 40/1 முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம். இலங்கையில் ஒரு சர்வாதிகார ஆட்சி தோன்றுவதைத் தடுக்கவும், ஜனநாயக கொள்கைகளைப் பாதுகாத்து வளர்க்கவும் நாட்டின் முற்போக்குச் சக்திகளுடன் நாங்கள் சேர்ந்து பயணிப்போம். 19ஆவது திருத்தத்தால் அமைக்கப்பட்ட சுயாதீன நிறுவனங்கள் பாதுகாக்கப்பட்டு மேலும் பலப்படுத்தப்பட வேண்டும். மேலும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை பலப்படுத்த இடமளிக்காது நாடாளுமன்ற ஜனநாயக கட்டமைப்பை நிலைநிறுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

## 12. எதிர்காலம்

யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை தேர்தல் மாவட்டங்களில் வாழும் வாக்காளர் யாவரும் ஒன்றுபட்டு, வடக்கு, கிழக்கு மக்களின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகளுக்காக தொடர்ந்து குரல் எழுப்ப, செயலாற்ற முழுமையாகத் தமது வாக்குகளை இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற பெயரிலும், வீட்டுச் சின்னத்திலும் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்து, தமிழ் மற்றும் தமிழ்பேசும் மக்களது அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் இந்தத் தேர்தல் அறிக்கையில் முன்மொழியப்பட்டிருக்கும் செயற்றிட்டங்களுக்கு தங்கள் ஜனநாயக ஆணையை பூரணமாக வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அன்புடன் வேண்டி நிற்கின்றது. இத்தேர்தல் அறிக்கையானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலைக் இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகியவற்றால் இணைந்து வெளியிடப்படுகின்றது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7